மன்றம்

வார ஏடு — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

லர் 6—இதழ் 21 ★ 22-9-57 சென்னை ★ விலை 16 காசு

வருக திராவிடம்!

—(o)—

நிலப்பரப்பும் விடுதலை உரிமையும்.

திராவிடம்!

அந்தப் பெயர் பலருக்குப் பலவிதமான ணர்வுகளைத் தருகிறது. வரலாற்றில், ண்பாட்டில், அரசியலில், மொழியியலில், லையில், இலக்கியத்தில், ஓவியத்தில், சிற் த்தில், பொருளாதாரத்தில், சமூகத்தில், அந்தப் பெயர்-பெயரின் தா றது! எல்லாவற்றையும் பா ார்த்தால் ஒரு புதிய அமைப்பு- புதிய சமுதாயம்-ஒரு புதிய நாடு டைக்கிறது!

திராவிடம் என்றால் பலருக்குத் திகில் ண்டாகிறது, சிலருக்குப் பயமேற்படுகி து! அதுவும் நமக்குத் தெரிகிறது!

திராவிடம் என்றால், வடநாட்டுக்காரர்கள் ருக்குத் திகில் உண்டாகிறது; தென் ட்டினர் சிலருக்குப் பயம் உண்டாகிறது! படவேண்டிய திகில், எதிர் பார்க்கக் டிய பயம்! திகில் கொள்பவர்கள் கோபத் க் கொட்டுகின்றனர், பயம் கொள்பவர் வசவுகளை வீசுகின்றனர்!

"இந்திய உபகண்டத்தில் பல்வேறு ாழிகள் மட்டுமல்ல, பல்வேறு நாடுகளும் க்கின்றன!" என்றால் "ஆகா! ஊகூ!" க் கூச்சலிடுகின்றனர்.

ாட்டுப் பிரிவினை என்றால் "முடியவே, யாது! கூடவே கூடாது! இதை ஒரு ம் அனுமதிக்கமாட்டோம்!" என்று காரத்திலிருப்பவர்கள் ஆர்ப்பரிக்கக் றோம்!

பிரிவினை பேசியவர்கள் நாட்டுத் துரோ , நாசகாலர்கள்!" என்று ஆளுங்கட்சி ர் மட்டுமல்ல, ஆளுங் க்கு எதிர் வரிசையில் க்கத் தகுதி படைத்த ள் தாங்கள் ஒருவர் என ஏமாப்புடன் ப்பவர்களும் கூவுகிறார்கள்.

திகாரத்திலிருப்பவர், அந்த அதிகா தக் கைப்பற்றத் துடிப்பவர்கள்— ர்கள் கொள்ளுகிற திகிலுக்குக் கார நமக்குப் புரிகிறது! இப்பொழுதுள்ள காரம்சிதைந்துவிடும், இப்பொழுதுள்ள காரத்தின் அளவு குறுகிவிடும் என்ற எண்ணம் அவர்களுக்கு உண்டாகிறது. சேர்த்துவைக்கப்பட்டுள்ள அதிகாரத்தை கட்டி வைக்கப்பட்டுள்ள ஆதிபத்தியத்தை யார் எடுத்துக் கொள்வது என்பதில் போட்டி யேற்படுகிறதே தவிர மற்றவர் களின் உரிமைகளைப் பறித்து ஓரிடத்தில் சேர்த்து வைப்பது சரியா என்பதை அவர் கள் ஆராயவில்லை; அவர்கள் ஆராயவும் மாட்டார்.

பல்லக்குத் தூக்குவதில கலை, கொடுமைகளைப் பல்லக்கு... திருப்பவன் எண்ணிப் பார்க்கமாட்டான். பல்லக்கைத் தூக்குபவர்கள்தாம் எண் ணிப் பார்ப்பார்கள்!

எனவே கோபம் கொள்ளும் ஆதிக்கக் காரர்களுக்கும் ஆதிக்க வேட்கையினருக் கும் நாம் எந்த விளக்கமும் தரமுடியாது.

நாட்டுப் பிரிவினை என்றதும் பயம் கொள்பவர்கள் இருக்கிறார்கள். "பிரிவினை ஏற்பட்டால், என்ன நேருமோ ஏது ஆகுமோ?" என்று உண்மையாகவே அவர் கள் அஞ்சுகிறார்கள். நாடு பிரிந்தால் அழிவு காலம் சூழும் என அவர்கள் நம்புகிறார்கள். அதனால் "வேண்டாம் இந்த அழிவுவேலை!" என்று கூறுகிறார் கள்.

இந்தியா இரண்டாகவோ மூன்றாகவோ பிரிந்தால் என்னதான் ஆகும்? இதை தைரியமாகக் கேட்டுப் பார்க்கவேண்டும்.

இந்தியாவில் பிரிவினை ஏற்பட்டால்' வானம் விழுமா? வையகம் வெடிக்குமா? கடல் வரளுமா? காற்று நின்றுவிடுமா?

இரா. செழியன்

என்ன நேரிடும், இப்பொழுதுள்ள இந்தி யாவில் இரண்டு மூன்று பகுதிகள் பிரிந்து நின்றால்? பிரிவினை என்று எண் ணவே மனங் கூசுபவர்கள், இரண்டு மூன்று பகுதிகள் என்றால் நிச்சயம் மூர்ச்சையாகிவிடுவார்கள். பிரிவினை என்றால் அவ்வளவு பயங்கரமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது.

பிரிவினை என்று ஏற்படும்பொழுது என்ன ஏற்படுகிறதென்று பார்த்தால், முத லாவதாக நிலப்பரப்பு குறைகிறது.

வாடை தொலைக!

வாடை என்றால் வடக்கிலிருந்து வருவது என்று பொருள், தென்றல் என்றால் தெற்கிலிருந்துவருவது.

தமிழர்களுக்கு வாடைக்காற்று பிடிக்காத ஒன்று; தென்றல் காற் றையே அவர்கள் வரவேற்பார்கள்!

வாடைக்காற்று குளிர்காலத்தில் குளிரைத் தாங்கிவருவது. தென்றல் காற்று இளவேனில் காலத்தில் இனிமையையும் மென்மையையும் பரப்பிவருவது!

வடக்கிலிருந்துவரும் வாடை தமி ழர்களுக்கு ஆகாததுபோல், வடக் கிலிருந்து வருகிற இந்தியென்ற வாடையும் ஆகாதது!

வாடைக்காற்று குளிரால் உடலை நடுங்க வைக்கும். இந்தி எனும் வாடை கொடுமையால் உள்ளத்தை நடுங்கவைக்கிறது!

தமிழ் என்ற தென்றல் இருக்கும் பொழுது இந்தியென்ற வாடை தமிழ் நாட்டுக்குத் தேவையில்லை!

வேண்டாம் அந்த நச்சுவாடை! வேண்டாம் அந்த வடநாட்டுப் பீடை!

வடக்கிலிருந்து வருகிற வாடை யைப்பற்றி தமிழ்ப் பெரும்புலவர் பேராசிரியர் டாக்டர் ரா. பி. சேதுப் பிள்ளை அவர்கள் எச்சரித்துள்ளார் மறைமலையடிகளின் ஏழாம் ஆண்டு நினைவு விழாவில் பேசும்பொழுது பின்வருமாறு கூறியுள்ளார்.

"வடக்கிலிருந்து வருகின்ற வாடை வந்தவழி ஓட்டுதல் வேண் டும். அதற்குத் தமிழர்கள் ஆயத்த மாக இருத்தல் வேண்டும்!

இத்தகைய பேரிடர்கள் பல ...

... தமிழ ... வரு இடர்களைத் தடுத்தே தீருவோம்!

இனி எந்த நாட்டு மொழியும் இந்த நாட்டில் படையெடுக்க முடி யாது, படையெடுக்க விடக்கூடாது!

தமிழ்தான் தமிழ்நாட்டுக்குரிய மொழி!

நமக்கு நல்லகாலம் வந்துவிட் டது. இன்று பல கட்சிக்காரர்களும் ஒருங்கே கூடியிருக்கின்றனர். வேற் றுமைகளையெல்லாம் மறக்கச்செய்து அனைவரையும் ஒன்று கூட்டுவிக்கும் ஆற்றல் தமிழ்மொழி ஒன்றிற்குத் தான் உண்டு இங்கு கூடியுள்ள அனைவரும் ஒருமுகமான கருத் தையே கொண்டிருக்கின்றனர். இக் தக் கூட்டத்தில் நாம் தெரிவிக்கும் ஒருமுகமான கருத்தை-அதன் உண் மையை ஆட்சியாளர்கள் அறிவார் களேயானால், நாளையே நம் எண் ணம் வெற்றிபெறும்."

மறைமலையடிகள் காட்டிய உணர்ச்சி, தமிழ்ப் புலவர்களிடம் இன்னும் மங்கவில்லைஎன்பதை டாக் டர் சேதுப்பிள்ளையின் பேச்சு காட்டு கிறது.

வாடைக்காற்று வீசத் தொடங்கி யதும், வேற்று நாடுகளுக்குச் சென் றவர்கள் திரும்ப வந்து கூடுதல் வழக்கம். இப்பொழுது இந்தி யென்ற வாடை வீச ஆரம்பித்துள் ளது, வேறுவேறு கட்சிகளிலும் அமைப்புகளிலும் இருப்பவர்கள் ஒன்றுகூடி அதைத் தடுக்கவேண் டும்!

நச்சு வாடையை — இந்த நாட் டைப் பிடிக்க வரும் பீடையை ஒழித் துக் கட்டுவோமாக!

பிரிவினை கூடாது என்பவர் க்கு ஏற்படுகிற பயத்துக்கு துதான் முதற்காரணம்! பிரி யால் நிலப்பரப்பு குறைகி து, பெரிய நாடாக இருப்பது ிய நாடுகளாகிவிடும், சிறிய ாக இருந்தால் மற்றொரு ட்டால் ஆபத்து ஏற்படும், கச் சிறிய நாட்டைவிட ரியநாடுதான் நல்லது. இது ன் அவர்களுடைய எண் த்தின் போக்காக இருக்கும்.

இந்த நிலையில், இரண்டு ன்று அடிப்படைக் கருத்துக் ா நாம் ஆராயவேண்டும்.

முதலாவதாகச் சிறிய நாடு ன்று ஒரு அளவு கிடையாது, ரிய நாடு என்று ஒரு வரை ற கிடையாது. ஒன்றைப் ர்த்து ஒன்று பெரிய நாடு, ிய நாடு என்று ஏற்றத்தாழ் க் கற்பிக்கப்படுகிறது. ஜப் ானுக்கு இலங்கை பெரியநாடு லப்பரப்பை வைத்துப் பார்க் ும் பொழுது. ஆனால் இந்தி ாவுடன் ஒப்பிடும்பொழுது லங்கை சிறிய நாடாகிறது. ுக ஒப்புதல் மூலம் சிறிது ரிது கற்பிக்கப்படுகிறதே ன்றி வேறில்லை. ஒவ்வொரு ாட்டையும் வேறொரு பெரிய ாட்டுடன் ஒப்பிட்டுப்பார்த் துக் கொண்டே போனால், டைசியாக ஒரே ஒரு நாடு ான் எல்லாவற்றையும் விடப் ெரியதாக இருக்கும். உண் மையில் தென்னமெரிக்காவில் ள்ள பிரேசில் நாடு, தனிப்

ப இருக்கத் தகுதியான, என்றால், உலகில் பிரேசில் ஒன்றைத் தவிர, மற்ற நாடு களும் தகுதியற்றவையா கும். மற்ற நாடுகளையெல்லாம் பிரேசிலுடன் சேர்த்து ஒரே உலக நாடாக ஆக்குவதைத் தவிர வேறு வழியிருக்காது. இரண்டாவதாக உலகத்தில் பெரிய நாடுகள் என்று இருப் பதை விட, நிலப்பரப்பில் சிறிய நாடுகளாக இருப்பவைகள் அதிகமாக இருக்கின்றன. இவ்வாறு அதிகமான சிறு நாடுகள் இருப்பதன் ஓரே கார ணத்தால், ஆபத்தோ அழிவோ வந்து விடவில்லை. இப்பொழுது இருக்கும் நாடு களின் எண்ணிக்கையுடன் ஒன்று இரண்டு கூடுவதால் ஒன்றும் பயங்கரம் நேர்ந்து விடாது.

நாம் கூறுகிற திராவிடம் அப்படியொன்றும் மிகச் சிறிய அளவுடைய நாடு அல்ல! அதன் நிலப் பரப்பு இப்பொ ழுது வரையறுக்கப்பட்டிருக் கும் அளவில், 2,48,130 சதுர மைல்களாகும்!

உலகப் படத்தைப் பார்வை யிட்டால், திராவிடத்தை விட சிறியனவாக, 130க்குறையாத எண்ணிக்கையுள்ள தனிப் பட்ட நாடுகள் இருக்கின்றன! நிலப்பரப்பின் காரணமாக இந்த 130 நாடுகளும் பிரிந்து,

(11-ம் பக்கம் பார்க்க)

திராவிடத்தைவிட குறைந்த நிலப்பரப்புடைய உலக நாடுகள்.

திராவிடத்தின் நிலப்பரப்பு . 2,48,130 சதுர மைல்கள்

ஐரோப்பாவில்

எண்.	நாட்டின் பெயர்.	பரப்பு (சதுர மைல்)	அரசியல் அமைப்பு
1.	அல்பேனியா	10,629	குடியாட்சி
2.	ஆஸ்திரியா	32,388	,,
3.	பெல்ஜியம்	11,783	முடியாட்சி
4.	இங்கிலாந்து	93,371	,,
5.	கால்வாய்த் தீவுகள்	75	காமன்வெல்த்
6.	மான் தீவு	221	,,
7.	ஜிப்ரால்டர்	2	,,
8.	மால்டா	122	,,
9.	பல்கேரியா	42,741	குடியாட்சி
10.	செக்கோசுலேவேகியா	49,330	,,
11.	டென்மார்க்	16,575	முடியாட்சி
12.	எஸ்டோனியா	18,357	குடியாட்சி
13.	பின்லாந்து	130,160	,,
14.	பிரான்சு	212,741	,,
15.	மேற்கு செர்மனி	94,634	,,
16.	கிழக்கு செர்மனி	41,700	,,
17.	சார்	991	,,
18.	கிரேக்க நாடு	51,182	முடியாட்சி
19.	ஹங்கேரி	35,893	குடியாட்சி
20.	ஐஸ்லாந்து	39,709	,,
21.	அயர்லாந்து	26,601	,,
22.	இத்தாலி	116,235	முடியாட்சி
23.	லட்வியா	25,395	குடியாட்சி
24.	லிச்டென்ஸ்டைன்	65	முடியாட்சி
[illegible]	[illegible]	22,958	குடியா.
		1,010	முடியாட்சி
	[illegible]	(ஒரு சதுரமைலுக்குக் குறைவு)	,,
28.	நெதர்லாந்து	12,514	,,
29.	நார்வே	125,193	,,
30.	போலந்து	119,703	குடியாட்சி
31.	போர்ச்சுகல்	35,413	,,
32.	ருமேனியா	91,654	,,
33.	ஸ்பெயின்	194,945	முடியாட்சி
34.	சுவீடன்	173,341	,,
35.	சுவிட்சர்லாந்து	15,940	குடியாட்சி
36.	டிரிஸ்டி	293	ஐ. நா. பாதுகாப்பு
37.	வாடிகான்	109	போப் ஆட்சி
38.	யூகோஸ்லேவியா	99,181	குடியாட்சி

ஆசியாவில்

எண்.	நாட்டின் பெயர்.	பரப்பு (சதுர மைல்)	அரசியல் அமைப்பு
39.	ஏடன்	112,108	பிரிட்டனுக்குக் கட்டுப்பட்ட
40.	பாகரைன் தீவுகள்	213	சுல்தான் ஆட்சி
41.	குவைட்	9,000	,,
42.	ஓமன்-மஸ்காட்	65,000	,,
43.	குவாடர்	4,000	,,
44.	துருசியல் கடற்கரை	16,000	,,
45.	ஏமன்	31,000	,,
46.	பூடான்	18,000	முடியாட்சி
47.	யோர்னியோ	29,417	காமன் வெல்த்
48.	புருனே	2,226	,,
49.	சரவாக்	50,000	,,
50.	இலங்கை	25,332	குடியாட்சி (காமன் வெல்
51.	சைப்ரஸ்	3,572	காமன் வெல்த்
52.	ஹாங் காங்	391	,,
53.	மலேயா	50,680	(காமன் வெல்த்)
54.	சிங்கப்பூர்	282	,,

(11-ம் பக்கம் பார்க்க)

மன்றம்

ஞாயிறு 22—9—57 சென்னை

நங்கவரம் அறப்போர் வெற்றி!

நங்கவரம் பகுதியில் உழவர்கள் நடத்திய அறப் போர் வெற்றி பெற்று, கடைசியாக அமைதி காணப்பட் ள்ளது! அரசாங்கத்தினர் இயற்றிய சட்டத்தில் காணப் ட்ட குறைபாடுகள் பல நூறு குடும்பங்கள் பிழைக்க ழியின்றி, வயலை விட்டும் ஊரைவிட்டும் வெளியேற்றப் டும் நிலை பிறந்தது. சட்டத்தில் இருந்த சந்து பொந்து ளின் வழியாக மிராசுதாரர்களின் வலிய கரங்கள் ஏழை ழவர்களை வெளியே பிடித்துத் தள்ள முயன்றன! மைதி காக்கும் பொறுப்பில், கொடுமைப்படுத்தப்படும் ழவர்களுக்குத் துணை செய்யாமல் அரசாங்கம் இருந்தது! த்துடன் துப்பாக்கி முனைகளைக் காட்டி, உழவர்களைப் மிறுத்தவும் செய்தது! சட்டத்தினால் தவறவிடப்பட்டு, ராசுதாரர்களால் கொடுமைப்படுத்தப்பட்டு, அரசாங் த்தால் கைவிடப்பட்ட நிலையில், ஏழை உழவர்கள் ஆயிர ர்கள் ஓரணியில் திரண்டு அறப்போர் துவங்கினர்! வர் பெருங்குடி மக்களின் உரிமைகாக்கும் அந்தப் ல், அந்த வட்டாரத்துப் பிரதிநிதியான மு. கருணாநிதி முன்னின்று உதவினார். கழகத் தாழர்களான அம்பில் தருமலிங்கமும், உழவர் சங்கப் பாறுப்பில் இருந்த தி. வி. முத்துகிருட்டிணன், கவுண் பட்டி முத்து ஆகியவர்களும் அறப் போராட்டத்தை, றுதி தளராமல், அதேசமயத்தில் அமைதி குலையாமல் டத்தினார்கள். ஆளவந்தார்களின் அடக்குமுறையும், லக்கிழார்களின் பிடிவாதமும் மிகக் கொந்தளிப்பான காரு சூழ்நிலையை உருவாக்கி விட்டதேனும், அறப் பாராட்டத்தை அமைதியுடன் அவர்கள் நடத்தியது ராட்டுதற்குரியது. மூன்று வார காலத்தில் 150க்கு மற்பட்ட உழவர்கள் உரிமைகாக்கும் முறையில் சிறை ட்டனர். கடைசியாக பிடிவாதம் பிடித்தவர்கள் வேறு கையின்றி அமைதி பேசத் தொடங்கி, ஒருவகை உடன் பாட்டுக்கு வந்துள்ளனர். அந்த உடன்பாட்டின்படி, ழவர்களை வேளியேற்றுவது தடுக்கப்பட்டுள்ளது. முன் ருந்த மாட்டேர் கையேர் உரிமைகளைப் பாதுகாப்பதி ம், வேறு சில உரிமைகளை பெறுவதிலும் உழவர்கள் வற்றி பெற்றுள்ளனர்.

உறுதியுடன் நின்று, அறப்போர் புரிந்து, வெற்றி பற்ற உழவர்களை நாம் வாழ்த்துகிறோம்! கொந்தளிப்பு வடிக்கக் கூடிய நிலையிலும், பொறுமையுடன் அமைதி த்து, வெற்றிக்கு அழைத்துச் சென்ற அறப் போராட் த் தலைவர் அவர்களையும், சங்கத் தலைவர்களையும், நாம் ராட்டுகிறோம்!

இந்த நிலையில் அரசாங்கத்திற்கும் நாம் ஒன்று கூற வண்டியிருக்கிறது. இப்பொழுது ஒரு வகையில் ஒருமைப் டும் அமைதியும் நீடிக்கிறதேனும், சட்டத்தில் காணப் டும் குழப்பத்தை மேலும் நீடிக்கச் செய்யாமல் விரைவில் தைத் திருத்தி, பாதிக்கப் பட்டுள்ள உழவர்களைப் பாது க்க முயல வேண்டும். இப்பொழுது உடன்பாட்டால் துகாப்புக் கிடைத்துள்ளது, ஆனால் சட்டத்தினால் உரி மப்படி பாதுகாப்புக் கிடைக்க அரசாங்கம் விரைந்து சயலாற்ற வேண்டும். சட்டத்தின் குறைபாட்டை நீக்கி, ழவர் பெருங்குடி மக்களுக்குற்ற திண்டாட்டத்தை நீக்க வண்டும்! இல்லையேல். ஆண்டு தோறும் அங்கில்லாவிட் ல் மற்றொரு இடத்தில் சச்சரவு மூளும், அறப்போ ட்ட நிலைக்கு உழவர்கள் துரத்தப்படுவார்கள், மீண்டும் ஒரு உடன்பாடு வரவேண்டியிருக்கும்! தனிப்பட்ட முறை யில் சச்சரவுகள் விடப்பட்டால், அதில் உறுதியான முடிவு ஏற்படாது. சட்டத்தில் சரியான எல்லை போடப்பட்டு விட்டால், அதன்படி உரிமைகள் பாதுகாக்கப்பட்டு விடும், பின் உரிமைப் போராட்டத்துக்கோ, உடன் பாட்டுக்கோ அவசியமிருக்காது! உழவர் சட்டத்தில் ஏற்பட்டுள்ள குற் றங் குறைகளை அரசாங்கம் உடனடியாக நீக்கவேண்டும்!

உழவர் பிரச்சினைகளில் அமைதியில்லா விட்டால், அது உழவர்களை மட்டுமல்ல, நாட்டு மக்களின் உணவை பாதிக்கும். எனவே அரசாங்கம் இந்தத் துறையில் அலட்சியமாக இருந்துவிடக்கூடாது.

மறைமலையடிகள்

தமிழ் நாட்டில் தூய தமிழ் பரவ பாடுபட்டவர்களின் முதலிடம் பெறுபவர் மறைமலையடிகள் ஆவார்கள்! அவர் ஆற்றிய அரும் பெரும் பணியை நினைவு கூறும் பொருட்டு, அவர் வாழ்ந்த பல்லவபுரத்தில் ஓர் தமிழ்க் கல்லூரியும், அவர் பெயரால் சென்னையில் ஒரு தமிழ் ஆராய்ச்சி நூல் கமும் ஏற்படுத்த, மறைமலையடிகளின் ஏழாம் ஆண்டு நினைவு விழாக் குழுவினர் தீர்மானித்துள்ளனர்! இந்த முயற்சி பாராட்டுதலுக்குரிய தொன்றாகும்!

நலிந்து கிடந்த தமிழுலகில் புத்துணர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் உண்டாக்கியவர் மறைமலை ஆவார்கள்! அவர் தந்த ஊக்கமும், எழுப்பிய உணர்ச்சியும் தமிழுக்கு புதிய ஆக்கத்தைத் தந்தன! தமிழ்மொழியின் இனிமையும் பண்பும் கெடும் விதத்தில், மிகக் கொச்சை நடையில் பிற மொழிச் சொற்களை வீணே கலந்து எழுதியும் பேசியும் வந்த காலத்தில், மறைமலையடிகள் தமிழில் எழுதினர், அதிலும் தமிழை எழுதினர்! பிறமொழிச் சொற்களைத் தள்ளி எழுதுவது முடியாத செயல் எனப் பலர் மயங்கி யிருந்த நிலையில், ஒருவர் தம் கருத்துக்களை வெளியிட வேண்டு மளவு நல்ல தமிழ்ச் சொற்கள் தமிழில் இருக்கின் [illegible]

றன [illegible]
தமிழ் [illegible]
தமிழ்ச் சொற [illegible], [illegible] வது

பல மாணிக்கக் கற்களை அடிகள மக்கள் முன் எடுத்து வைத்தார்! "மறைமலையடிகளின் தமிழ்" என்று கூறு மளவு தனித் தமிழிலக்கியத்தை அவர் கண்டார்! தூய தமிழுக்கு அவர் நடை புதிய வழியமைப்பாயிற்று. தமிழின் தனிமை மட்டுமன்றி, தமிழின் பீடும் பெருமையும், வலிவும் பொலிவும், இனிமையும் தண்மையும் அவர் நடையில் வெளிப்படலாயின!

தமிழுக்கு பொதிகை மலை என்பதுபோல், தமிழுக்கு மறைமலை என்ற உணர்வை புலவர்களிடை மறைமலையடிகள் உண்டாக்கினர்!

அவரது உழைப்பில், ஆராய்ச்சி நூல்கள், உரை நூல்கள் பிறமொழி நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்புகள், பெருங்கதைகள், இன்ன பிற சிறந்த இலக்கிய படைப் புகள் எழுந்தன! அவர் யாத்த ஒவ்வொரு நூலும் அந்தத் துறையில் முத்தாய்ப்பு வைத்தாற் போன்று பின் வரும் எவரும் குறிப்பிட்டுக் கூறும் வகையில் உயர்வுற்றுத் திகழ்ந்தது!

தமிழை வளப்படுத்தியது மட்டுமல்லாமல், தமிழுக்கு ஊறு நேர்ந்தகாலை அதைத் தடுக்கவும் அவர் முன் வந்தார்! கட்டாய இந்தி தமிழ் நாட்டில் புகுந்தகாலை முதன் முதலாக "இந்திப் பொதுமொழியா?" என்ற ஆராய்ச்சி நூலை வெளியிட்டு, இந்தியைப் பற்றிக் கூறப் படும் வீண் புனைந்துரைகளை அம்பலமாக்கியதுடன், இந்தி எதிர்ப்பு மாநாட்டுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் தாமே தலைமை வகித்து அறப்போருக்கு உணர்ச்சிக் களனாக விளங்கினர்! அவர் மொழிப் பற்று சொல்லிலும் செயலி லும் விளக்க முற்றது!

தனித் தமிழின் கருவூலமாக, தமிழாக்கத்தின் ஆரம்ப மாக, தமிழுக்கு வரும் ஊறுகளை எதிர்த்து நிற்கும் படைக் கலனாக மறைமலையடிகள் விளங்கினர்! அவர் பணியும் முயற்சியும் நிலைபெற, ஏற்படுத்தப்படும் தமிழ்க் கல்லூரியும் தமிழ் ஆராய்ச்சி நூலகமும் சிறப்புற்று வளர்வதாக என வாழ்த்துகிறோம்!

ஓடிப்போனவரைத் தேடிப்போனாள்!

அவனோ ஆற்றல் மிக்க ஆணழகன்! அவளோ அழகு மிக்க இளநங்கை! இருவரும் களவொழுக்கத்தில் ஈடுபட்டுக் காதலின்பத்தை நெடிதுநாள் துய்த்து வருகின்றனர்.

களவொழுக்கத்தை உற்றாரும், உறவினரும், ஊராரும் அறிந்துகொண்டு விடுவார்களோ என்ற அச்சத்தால் அலைக்கழிக்கப்பட்டு, மிக்க நடுக்கத்தோடு இரவுக்குறி, பகற்குறி இடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, களவொழுக்கக் களியாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் செய்தி எப்படியோ ஊரிலுள்ள முதுமைப் பெண்டிர்களுக்குத் தெரிந்துவிடுகின்றது. அவர்கள் மெல்ல மெல்ல [illegible] யான உ[illegible] [illegible]ன் செவிகளுக்குச் செய்தி விரைவாக எட்டிவிடுகிறது. தலைவியைக் கண்டவுடனேயே ஆங்காங்கு நிற்கும் பெண்கள் ஒன்றுகூடிக்கொண்டு, தலைவியைக் கண்ணாலும், கையாலும், சுட்டிக்காட்டி ஏதேதோ குசுகுசுவென்று பேசத் தொடங்குகின்றனர். இந்தக்காட்சிகளைத் தொடர்ந்து எங்கணும் கண்ணுறும் தோழி, தலைவியைப்பற்றி ஏதோ அலர்தூற்றல் நடைபெறுகிறது என்பதைக் குறிப்பால் அறிந்து கொள்கிறாள். அப்படிப் பெண்டிர்கள் கூடி நின்று பேசும் இடங்களில், தோழி, ஏதும் அறியாத ஏதிலார் போல் அருகில் நின்று ஒற்றுக்கேட்டுப் பார்க்கிறாள். தலைவனும் தலைவியும் களவொழுக்கம் நடத்துவது பற்றிய அலர்தான் அது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்கிறாள். பிறகு தலைவியிடம் ஓடோடியும் போய்ச் சேர்கிறாள்.

ஊரில் அலர் கிளம்பிவிட்ட செய்தியைத் தோழி தலைவியிடம் மெல்ல சொல்லுகிறாள். தலைவி திடுக்குற்றுத் திகைத்துப்போய், நடுநடுங்கிச் செய்தி பெற்றோர் காதிற்கு எட்டினால் அவர்கள் எப்படிப்பட்ட கொடுந்தண்டனைகளை விதிப்பார்களோ என்று நினைத்து, கையைப் பிசைந்துகொண்டு, கண்ணீர் விட்டுக் கலங்குகிறாள். தோழி தலைவியின்கண்ணீரைத் துடைத்துவிட்டு “தப்பித்துக் கொள்வதற்கான வழி ஒன்று இருக்கிறது” என்று கூறுகிறாள். தலைவி உடனே முகமலர்ச்சியுற்று “என்ன வழி அது?” என்று வினவுகிறாள். “நீயும் உன் தலைவரும் நாளை விடிவதற்குள் இவ்விடத்தைவிட்டு வெளியூருக்குப் பாலை நிலத்தின் வழியே ஓடிவிடுவதுதான்!” என்கிறாள். “அது எப்படி முடியும்?” என்கிறாள் தலைவி. “அதற்கான ஏற்பாடுகளை இப்பொழுதே நான் செய்யத் தொடங்குகிறேன். நீ ஏதொன்றுக்கும் அஞ்சாதே!” என்று தோழி விடை பகருகிறாள்.

தோழி தலைவனைத் தனியே கண்டு, அன்று இரவு தலைவன் இரவுக்குறியிடத்திற்கு வர வேண்டியதையும் அங்கிருந்து தலைவியை உடன் கூட்டிக் [illegible]ற்குள் வெளி[illegible] [illegible]வேண்டி[illegible] [illegible]றுத்துகி[illegible] தலைவனும் தோழி சொல்லியதற்கேற்ப நடக்க இசைகிறான்.

ஒரே அல்லோலகல்லோலமாகி, ஒரே ஆரவாரமாகக் காட்சியளிக்கின்றன. செவிலித்தாயும் நற்றாயும் தோழியைக் கூப்பிட்டுத் தலைவியைப்பற்றி ஏதேனும் தெரியுமா என்று கேட்கிறார்கள். தலைவியைப்பற்றி ஏதொன்றும் அறியேன் என்று கூறுகிறாள்.

பெற்றோர்கள் ஆறுத்துயருற்று அழுவதைக் கண்ட வம்புப் பெண்டிரிலே சிலர் முன்வந்து அழகும் ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற தலைவனோடு தலைவி கொண்டிருந்த களவொழுக்கத்தைக் குறிப்பிட்டு, அவர்கள் இருவரும் உடன் போக்காக வெளியூர் ஓடிப்போயிருக்கக்கூடும் என்றும், அலருக்கும் பெற்றோர்களின் தண்டனைக்கும் அஞ்சும் இளங்காதலர்கள் அப்படி ஓடிவிடுவது உலகமரபுதானே என்றும் கூறுகிறார்கள். அது உண்மையாக இருக்கக்கூடும் என்ற முடிவுக்குப் பெற்றோரும் உற்றாரும் வருகின்றனர்.

★ இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. ★

தலைவனும் தலைவியும் இரவுக் குறியிடத்தில் வழக்கம் போல் கூடுகிறார்கள். தோழியிடம் சொல்லவேண்டியதையெல்லாம் சொல்லிவிட்டு, விடியற்காலையில் வெளியூருக்குப் புறப்பட்டுப் போகிறார்கள். இடையிலேயே வரும் காடுகளையும், பாலைவனங்களையும், தாண்டி நீண்ட தொலைவுக்கு அப்பாலுள்ள ஊருக்குப் போகத் திட்டமிட்டுச் செல்கின்றனர்.

பொழுதுவிடிந்து நீண்ட நேரம் ஆகியும் அருமைமகளின் நடமாட்டத்தையோ, பேச்சுக் குரலையோ கேட்காத செவிலித்தாய், மகள் படுத்துறங்கிய இடத்தைப் போய்ப்பார்க்கிறாள். மகளைக் காணாமல் திடுக்கிட்டுக் கொல்லைப் புறத்திற்கும், தெருப் புறத்திற்கும் ஓடியாடித் தேடுகிறாள். எங்கும் மகளைக் காணாமற்போகவே நற்றாய் இடத்திலும், தந்தையிடத்திலும் செய்தியை அறிவிக்கிறாள். எல்லோரும் அடித்துப்புடைத்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடிஓடித் தேடிப் பார்க்கிறார்கள். ஏவலாளர்கள் ஆளுக்கு ஒருமூலை ஓடித்தேடுகிறார்கள். வீடும் தெருவும்

தலைவியை எப்படியும் தேடிப் பிடித்து அழைத்துக்கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டுச் செவிலித்தாய் புறப்படுகிறாள். செவிலி மகளின் அருமையையும், சிறப்பியல்புகளையும் பற்றிச் சிந்தித்தவாறு ஊரைவிட்டு வெளியேறி யாமரங்களும், ஓமைமரங்களும் நீண்டு வளர்ந்து அடர்ந்து காணப்படும் காட்டின் ஊடே அமைந்துள்ள வழியில் தள்ளாடித் தள்ளாடி நடந்து ஏகுகிறாள். வரிகளாக மணிச்சரங்கள் கட்டித் தொங்கும் தலைவியின் இடையின் அழகையும், அழகிய பசலை படர்ந்த அவளின் உடம்பின் வனப்பையும், வரிசையாகக் காணப்படும் அவளின் வெள்ளிய பற்களையும், அடர்ந்து விளங்கும் கூந்தலையும், பாதிரிமலர் சூடிய சடையினையும், சிலவாய வளையல்கள் அணிந்த அவளது அழகிய கையினையும் நினைந்து நினைந்து பாலைவன வெம்மையில் அவையெல்லாம் எப்படி வாடி வதங்குகின்றனவோ என்று எண்ணித் துயருறுகிறாள்.

மரங்களும் புதர்களும் நிறைந்த காடுகளும், தொந்தி
மணல் நிரம்பிய பாலை[illegible]
களும் அடுத்தடுத்துக் கா[illegible]
பட, செவிலி வழிநெடுகபோ[illegible]
கொண்டே இருக்கிறாள். [illegible]
ரில் நீண்ட தொலைவில் [illegible]
ஆணும் பெண்ணும் வ[illegible]
தைக் காண்கிறாள். அவ[illegible]
மகளும், மருமகனுமாக இ[illegible]
பார்களோ என்று க[illegible]
செவிலி சற்று விரை[illegible]
நடந்து போகிறாள். நெ[illegible]
நெருங்க ஒரு இளைஞனும், [illegible]
இளையோளுந்தான் வருகி[illegible]
கள் என்பதைப் புரி[illegible]
கொண்டு, அவர்கள் உ[illegible]
யாகத் தலைவனும் தலை[illegible]
மாகத் தானிருப்பார்கள் எ[illegible]
முடிவிற்குச் செவிலி வருகி[illegible]
நெடுந்தொலைவு போய்வி[illegible]
மகளைக் கண்டுவிட்டே[illegible]
என்று எண்ணிக், கண்களி[illegible]
கண்ணீர் மல்க, செவிலி ஓ[illegible]
டியும் அவர்கள் முன்னால் [illegible]
கிறாள். மிக்க அருகில் [illegible]
லும் போதுதான் அவ[illegible]
தம் மகளும் மருமகனும் [illegible]
லர் என்பதை அறிந்துகொ[illegible]
கிறாள். எப்படியும் வரு[illegible]
ரிடம் தம் மகள் மருமகன் [illegible]
றிய விவரம் கேட்டறிந்து [illegible]
சொல்லுவார்கள் என்ற எ[illegible]
ணத்துடன் அவர்களை நெ[illegible]
ருகிறாள்.

வழிநெடுக வந்துகொ[illegible]
டிருக்கும் இளங் காதலர்[illegible]
முன்னிலையில், ஒரு வயத[illegible]
தாய் வந்து நின்றவுடன், [illegible]
விளங்காதலர் [illegible]
கூப்பி வணக்கமு[illegible]
கிறார்கள்.

“நீங்களிருவரும் எங்கிருந்[illegible]
வருகிறீர்கள்?” என[illegible]
செவிலி அவர்களைப் பார்த்[illegible]
கேட்கிறாள்.

“நாங்கள் நீண்ட தொலை[illegible]
லிருந்து வருகிறோம்!” எ[illegible]
கிறான் இளைஞன்.

“எங்கே போகிறீர்கள்[illegible]
என்று வினவுகிறாள்.

“இந்த ஊரை அடுத்துள்[illegible]
ஊருக்குப் போகிறோம்!” எ[illegible]
கிறான்.

“நீங்கள் இருவரும் தனி[illegible]
கிளம்பி வருவதன் நோக்[illegible]
என்ன?” என்று கேட்கிறா[illegible]
செவிலி.

“அதுதான் எனது ஊ[illegible]
நாங்கள் இருவரும் அங்[illegible]
திருமணம் செய்துகொள்ள[illegible]
போகிறோம்!” என்கிறான்.

“உங்களோடு உற்றார் உ[illegible]
வினர் யாரும் வரவில்லையா[illegible]
என்று செவிலி வினவுகிறாள்[illegible]

“இவளது உற்றார் உ[illegible]
னவர் எங்கள் திருமண[illegible]
திற்கு உடந்தையாக இருக்[illegible]
மாட்டார்கள் என்ற காரண[illegible]
தால்தான், நாங்கள் இருவரு[illegible]
யாருக்கும் சொல்லிக்கொள்ள[illegible]
மல் ஓடிவிட்டோம்!” என[illegible]
றான். அப்பொழுது அந்[illegible]
இளையோள் வெட்கத்தா[illegible]
தலைகுனிந்து, வாயில் புடவை[illegible]
யின் முந்தாணி நுனியை வை[illegible]
துக் கடித்துக்கொண்டு, பெ[illegible]
விரலால் கீழே குழிபறித்து[illegible]
கொண்டு நிற்கிறாள்.

(9-ம் பக்கம் பார்க்க)

பதுங்கி வரும் தங்கம்!

—(0)—

மாதந்தோறும் 5 கோடி ரூபாய்க்கு கள்ளக்கடத்தல்.

—(0)—

பஞ்சாப் மாநிலத்தில், வேலியே பயிரை மேய்கிறதா?

(செல்வன்)

வடநாட்டில் கள்ளக் கடத்தல்களில் ஈடுபட்ட கும்பல்கள் பற்றி பத்திரிக்கைச் செய்திகள் அடிக்கடி வருகின்றன. குறிப்பாக பம்பாய், ஆமதாபாத், பஞ்சாப் மாநிலம் ஆகிய இடங்களில் தங்கம் ஏராளமாகக் கள்ளக் கடத்தல் மூலம் வந்து விடுவதாகத் தெரிகிறது. அரசாங்க மதிப்புப்படி, பஞ்சாப் எல்லை வழியாக நாள்தோறும் பத்தாயிரம் தோலா தங்கம் பாகிஸ்தானத்திலிருந்து இந்தியாவுக்குள் வந்து விடுகிறது. இந்தக் கணக்குப்படி பார்த்தால், மாதம் ஒன்றுக்கு பஞ்சாப் எல்லை வழியாக மட்டும் 5கோடி ரூபாய்க்கு தங்கம் கள்ளத்தனமாக வந்து விடுகிறது. பஞ்சாப் மாநிலத்துக்கும் பாகிஸ்தனத்துக்கும் 300மையில் நீண்ட எல்லை இருக்கிறது. இந்த நீண்ட [illegible]யின் வழியாக உள் [illegible]ழைந்திடும் தங்கத்தைத் தடுக்க, அரசாங்கம் செயலற்றிருக்கிறது. மாதமொன்றுக்கு 5 கோடி ரூபாய் என்றால் இன்னும் மூன்றாண்டு காலத்தில், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவதற்குள் 200 கோடி ரூபாய் தங்கம் இங்கு வந்து விடும், அதை வாங்கும் விதத்தில் 200 கோடி ரூபாய் அரசியலாரின் கவனத்தை மீறி, இந்த நாட்டிலிருந்து வெளியேறிவிடும்.!

இவ்வளவு பெரும் கள்ளக் கடத்தலை பஞ்சாப் மாநில அரசாங்கத்தினர் எப்படி பொறுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது வேடிக்கையாக இருக்கிறது. பத்திரிக்கைகளைப் பார்த்தால் அது வேடிக்கையாக அல்ல, வேதனைதரும் செய்தியாக இருக்கிறது!

கத்தியின்றி இரத்தமின்றிப் பெறப்பட்ட சுதந்திர நாட்டில், அதிகாரத்தையும், ஆணவத்தையும் துணைகொண்டு, ஒரு குறிப்பிட்ட கட்சிக்குட்பட்ட மக்களும், அவர்களைச் சார்ந்தோரும் தங்கள் வாழ்வு வளம் பெற நேர்மையற்ற பல வழிகளைப் பின்பற்றுகிறார்கள். சுதந்திரம் பெற்ற இந்தியாவில் ஆட்சியாளர்கள் மக்களுக்கு நலம் பயக்கும் திட்டங்கள் தீட்டி, வறுமையில் வாடும் ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபடாவிட்டாலும், மக்களைச் சுரண்டாமலாவது இருக்கக் கூடாதா? கொலை, கொள்ளை முதலிய அநாகரிக, மனிதத் தன்மையற்ற செயல்களைத் தடுத்து. மக்களைக் காட்டுப் போக்கினின்றும் திருப்பி நல்வழியில் செலுத்த முயல்வதே அரசினரின் முக்கிய நோக்கமாக இருத்தல் வேண்டும். ஆனால் பஞ்சாப் மாநிலத்திலிருந்து கிடைக்கக் கூடிய செய்திகள் நெஞ்சு கொதிக்கும் நிலையை உண்டாக்கியிருக்கின்றன.

ஒவ்வொரு நாட்டிலும் கொலை, கொள்ளை இவற்றைத் திட்டமிட்டுச் சதி செய்யும் கும்பல் இருக்கத்தான் செய்கிறது, ஆனால் எந்த நாட்டிலும் இந்த விந்தை நடந்ததில்லை. பாருக்கெல்லாம் பஞ்ச சிலம் போதிக்கும் பாரத புண்ய பூமியில் அரசாங்கமே கொலை கொள்ளை குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாமல் திண்டாடுகிறது. திறமையில்லாத காரணம் என்றால் நாம் ஆயாசப்படலாம். ஆனால் ஆட்சியில் வீற்றிருப்போருக்கு நெருங்கிய உறவினர்கள் குற்றம் கண்டுபிடிக்கப் படவில்லை என்றால் ஆச்சர்யம் மட்டுமல்ல அவநம்பிக்கையும் உண்டாகிறது.

பஞ்சாப் மாநிலத்தில், கள்ளத் தனமாகத் தங்கத்தைப் பதுக்குதலும், கடத்துதலும் நடைபெற்று வருகின்றன என்ற குரல் வெகு நாட்களாக எழுப்பப்பட்டது. உயர்தரப் போலீஸ் அதிகாரிகள், மாவட்ட மாநிலக் காங்கிரஸ்காரர்கள் பலர், அரசாங்கத்தில் இருப்போரின் உறவினர்கள், முதலியவர்களின் மேல் குற்றம் சாட்டிப் பேசப்பட்டது, பஞ்சாப் மாநிலத்தில் சென்ற சட்டசபைக் கூட்டத்தில் நடந்த பொது நிர்வாகத்துறை விவாதத்தின் பொழுது சுயேச்சை அங்கத்தினர் ஒருவர், முதன் மந்திரி பிரதாப் சிங் கெய்ரான் மேல் குற்றம் சாட்டிப் பேசியதாகத் தெரிகிறது. இந்தப் பகிரங்கக் குற்றச் சாட்டிற்குப் பிறகு, அரசாங்கத்தினர் உயர்தரப் போலீஸ் அதிகாரிகள் சிலரை மாற்றியும், சிலரை வேலையை விட்டே நீக்கியும், மற்றுஞ் சிலரைக் கீழ்ப் பதவிக்கு மாற்றவும் செய்தனர். காலக் தாழ்த்திச் செய்யப்பட்ட இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையினால் பலன் இல்லாமற் போகவில்லை. ஆனால் புதுத்தொல்லைகள் பல வளர்வதற்கு வ்ழி ஏற்பட்டது. கள்ளக்கடத்தல் சம்பந்தமாகச் சான்று கூறக் கூடிய பல போலீஸ் உயர்தர அதிகாரிகள் மாற்றப்பட்டதாகவும், உயர்தரக் காங்கிரஸ்காரர்கள் அவர்களின் நண்பர்கள். உறவினர்கள் ஆகியவர்களைப் பற்றி, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் பலர் கொடுத்த வாக்குமூலங்களை ஏற்காதது மட்டுமல்ல, எடுத்துக் கொள்ளவே யில்லையென்றும் தெரியவருகிறது.

பஞ்சாப் மாநில மக்கள் இந்தச் செய்தி பற்றியும் ஜாதி வெறியின் ஆதிக்கத்தின் கீழ் நடைபெற்ற பல்வேறு அக்கிரமங்கள் பற்றியும் அதிகம் கண்டிக்கத் தலைப்பட்டனர். ஜாதி வெறிக் குட்பட்ட அரசாங்க நிர்வாகம்பற்றி விசாரணை செய்யத் தனியாக, வேறு எந்த மாநிலத்திலும் இதுவரை வழக்கத்திலில்லாத முறையில் பஞ்சாப் மாநில கவர்னரைத் தலைவராகக் கொண்டு ஒரு கமிட்டி நியமிக்கப்ப[illegible].

இந் நிலையில், ஜுலைத் திங்கள் 22ம் நாள் பஞ்சாப் அரசாங்கம் ஒரு பத்திரிகைக் குறிப்பு ஒன்றை வெளியிட்டது. அக்குறிப்பில் கொள்ளைக் கூட்டத்தில் ஈடுபட்டுள்ள மந்திரி மகன் யார் என்று சொல்ல முடியுமா என்று அரசாங்கம் சவால் விட்டிருந்தது பஞ்சாப் மாநிலப்பத்திரிக்கைகளுக்குதங்கம் வெள்ளி கடத்தல்\ பற்றி வழக்கமாய் விசாரிக்கும் உள்நாட்டுஅலுவல் துறையையோ, அல்லது அரசாங்கக் காரியதரிசியையோ கலந்ததாகத் தெரியவில்லை. பத்திரிக்கைக் குறிப்பு வெளிவந்த மறுநாளே பஞ்சாப் அரசாங்கச்சவாலை ஏற்று, பஞ்சாப் மாநில பிரஜா-சோஸலிஸ்ட் கட்சியின் மாநில காரியதரிசியான திரு. ஹர்பஜன்ஸிங் பத்திரிகைச் செய்தியில் கீழ்க்காணும் திடுக்கிடும் தகவலை வெளியிட்டார், "தங்கத்தைக் கள்ளத்தனமாகக் கடத்துவதில் ஈடுபட்டவர்களில் ஒருவர் சுரிந்தர்சிங். இது மட்டுமன்றி வேறுபல குற்றங்களு கும் இவர் உடந்தையாவா முதன்மந்திரியின் மகனா இருப்பதால், அவர்மீது இரு கக்கூடிய குற்றங்கள் மறை கப்பட்டிருக்கின்றன."

இந்தச் செய்தியும் விவர களும் பம்பாய் பிளிட்ஸ் பத் ரிக்கையில் விளக்கமாகத் தர பட்டுள்ளன.

நெஞ்சில் உரமும், நேர்மை திறனும், குற்றமற்ற தன்மை யும் இருந்தால், ஹர்பஜன் ஸிங்கை வழக்கு மன்றத்திற் அழைத்துத் தன்மேல் சாட் டப்பட்ட குற்றங்கள் பொ யானவை என்றல்லவா நிரூபி திருக்கவேண்டும் சுரிந்த சிங்? அதற்குப்பதிலாக, பத் ரிகைக் குறிப்பொன்றை வெளி யிட்டுத் தன்மீது சாட்டப்பட் குற்றங்களுக்கு ஆதாரமான சாட்சியங்களைப் பாரதப் பி தமர் பண்டித நேருவுக்கோ அல்லது உள்நாட்டுமந்திரி ப துக்கோ அனுப்பிவைக்கும்படி சவால் விட்டிருக்கிறார். தன் மீது அவதூறு கூறியத காக வழக்காடுவேன் என்று பெயருக்குக்கூடக் கூறவி லையே அந்தமந்திரி மகன் அரசியல் வேறுபாடு காரண மாகச் சாட்டப்பட்ட குற்றங்க [illegible] குத்தாம [illegible] னம் செய்துகொள்[illegible] சுரிந்தர்சிங்!

வெள்ளையனின் கொள்ளை மனப்பான்மை கண்டு கொதி தெழுந்தார் காந்தியடிகள் நவகாளிக் கொலையை கண்டு கண்ணீர் உகுத்தா காந்தி! அணுக்குண்டு யுக தில் அகிம்சையைப் போதி தார் காந்தி! அவர்வழி வந் வர்கள் அவர் கட்டிக் கா துக் கண்ணீரும் செந்நீரு விட்டு வளர்த்த காங்கிர அரசேற்றுக் கொலைகொள்ளை இவற்றிற்கு ஆதரவளித்து போற்றிவருகிறது இந்தப் புண்ணிய பூமியில்! மந்திரி பீடத் லிருப்பவர்களின் மகனோ ம மகனோ, நெருங்கிய சுற்றமோ கள்ளக் கடத்தல்களில் மு நிற்பதால், அரசாங்க அதிகா கள் பாராமுகமாக இருந் விடுகிறார்களோ என்ற அச்ச மூள்கிறது, வேலியே பயி மேயமுற்பட்டால், பயிரை காப்பாற்ற யாரிருக்கிறார்கள்

இப்படியும் உண்டா?

ஒரு காண்ட்ராக்டர் செய்து முடித்த வேலைக்கு நமது அரசாங்க இரயில்வே இலாகா இரண்டு தடவைப் பணம் கொடுத்திருக்கிறது! தென்னிந்திய இரயில்வே பகுதியின் நடை பெற்ற வேலைக்கு இந்த "இரட்டிப்பு பணம்" தரப்பட்டுள்ளது! இவ்வாறு இரயில்வே நிர்வாகத்தின் "இரட்டைச் செலவால்" ஏற்பட்ட நஷ்டம், 1 லட்சத்து 6 ஆயிரத்து 825 ரூபாய்கள் (ரூ 1,06,825)!

பிறந்த தேதி

இரா. செழியன்

...னது வேலையில் மிகச்
...அற்பமான செய்திகள்
பெரிய குற்றங்களைக்
...பிடிக்க உதவியிருக்கின்
...'' என துரைசாமி ஆரம்
...தார். அவர் போலீசு இலா
...ல் முப்பதியும் பகுதியில்
...யாற்றி ஓய்வு பெற்றவர்.
...ர் ஒரு கதை சொல்லப்
...றார் என்று எதிரில்
...ந்திருந்த அவருடைய
...ர் நல்லமுத்து பொடி
...போட்டுக் கொண்டு,
...உடன் கேட்க ஆரம்பித்
... தான் வேலை பார்த்த
...ழுது நடந்த கதையைத்
...சாமி சொன்னார்.

...நான் சென்னைக்கு மாற்றப்
... வந்த பொழுது, அங்கு
...பெரிய பாங்கில் கொள்ளை
...ப்பட்டிருந்தது. அந்தக்
...ள்ளையைக் கண்டுபிடிக்
... நான் சென்னைக்கு மாற்
...பட்டிருந்தேன். கொள்ளைய
...கப்பட்ட தேதி கூட
...க்கு நன்றாக ஞாபகம் இருக்
...து,—ஆம் ஆண்டு ஏப்ரல்
...ந்தேதி, சனிக்கிழமை.

...மு ... மக
...நேரம். பாங்குப்
...மூடிவிட்டுப் போக காஷிய
இரண்டொருவர் மட்டும்
...ந்தார்கள். பெட்டியைப்
...ச் சாவியைக் காஷியர்
...ந்தபொழுது, பின்னாலி
...து அவர் முன் ஒரு கைத்
...பாக்கி முனை காட்டப்பட்
... திடுக்கிட்டுத் திரும்பி
..., நான்குபேர் முகங்களை
...த் துணியால் மூடிக்
...ண்டு கையில் துப்பாக்கிக
... நின்றனர். மற்ற ஊழி
...ரும் திகைத்து நின்றனர்.
விரைவில் இருவர் அவர்
...க் கட்டிப்போட, மூன்று
... நான்காவது ஆட்கள்
...ம்புப் பெட்டியில் அடுக்
...ட்டிருந்த நோட்டுக் கத்
...களை ஒரு பையில் போட்
...கள். சுவற்றில் மறைவாக்
...க்கப்பட்டிருந்த ஒரு
...ய அறிவிப்பைத் தொட
...யர் மெதுவாக நகர்ந்தார்.
...வில் வைக்கப்பட்டிருந்த
...ய அறிவிப்புகள் அனைத்
... அவனுக்குத் தெரியும்
...ல் தோன்றுகிறது. இவர்
...வதைப் பார்த்த கொள்
...க் கூட்டத் தலைவன், "நக
...தே!" என்று உறுமி, அவ
...யும் கட்டிப் போட்டுக் கிளம்
... சென்றான். எல்லாம் மிக
...கமாக நடைபெற்றன.

...வெளியில் காப்பி சாப்பி
... போயிருந்த ஒருவர்
...ம்பி வர, கட்டப்பட்டிருந்த
...ஷியரும் கிளர்க்குகளும்
...விக்கப் பட்டார்கள். வெளி
... நின்று கொண்டிருந்த கூர்க்காவைப் பார்த்தால், மயக்கம் போட்டு மூலையில் சாய்ந்து கிடந்தான். கொள்ளைக் கூட்டத்தார்கள் முதலில் அவனை மயக்க மருந்து மூலம் முடக்கிப் போட்டு விட்டு, உள் வந்திருக்கின்றனர். கொள்ளையடிக்கப்பட்ட பணம் ஒரு லட்சத்து இருபத்து மூவாயிரம்! ஆகையால் பரபரப்பு அதிகமிருந்தது.

நான் சென்னை வந்து சேர்ந்ததும், இந்த வழக்கு விபரங்கள் என்னிடம் தரப்பட்டன. கொள்ளையடிக்கப்பட்ட இடத்தைப் போய் பார்த்தேன், காஷியரும் மற்று மிருந்த கிளர்க்குகளின் வாக்கு மூலங்களையும்-முதலில் தரப்பட்டிருந்தன, அவற்றில் விடுபட்ட ஓரிரு இடங்களுக்கான விளக்கங்களை நான் தெரிந்து கொண்டேன். பாங்க் இருந்தது ஒரு அமைதியான, பெரிய சாலை. பாங்க் வரிசையில் பெருங் கட்டிடங்களும், எதிர்வரிசையில் நீண்ட மதிற்சுவரும் இருந்தன. கொள்ளையடிக்கப்பட்ட ஏழு கூச்சல் போட்டிருந்தால்கூட, யாருடைய காதிலும் விழுந்திருக்காது. விழுந்தாலும் அவர்கள் வருவதற்குள் கொள்ளைக்காரர்கள் தப்பிப்போக நேரமிருந்தது. கொள்ளைக்காரர்கள் ஒரு காரில் வந்து மீண்டும் அதில் போயிருக்கிறார்கள். வெளியில் நின்று கொண்டிருந்த கூர்க்கா, வந்து நின்ற காரைப் பற்றி சிறிது சொன்னான். அவனைத் தவிர, மற்றவர்கள் கவனத்தை அந்தக் கார் கவர்ந்ததாகத் தெரியவில்லை.

வழக்கமான முறையில் துப்புத் துவக்க ஆரம்பித்தேன். பாங்கு தந்த நூறு ரூபாய் நோட்டு எண்களை எல்லா இடங்களுக்கும் அனுப்பி, அந்த எண்ணுள்ள நோட்டுகளை யாராவது கொண்டு வந்தால், உடனே பிடித்து வைக்கச் சொன்னேன். பாங்குகள், ஓட்டல்கள், இரயில்வே நிலையங்கள் முதலியவற்றில் கண்காணிப்பாளர்களை வைத்தேன். கொள்ளைக் காரர்களின் அங்க அடையாளங்கள்-முகம் மறைக்கப்பட்டிருந்த போதிலும், உத்தேசமான உயரம், பருமன், தோற்றம் இவைகளைக் கேட்டு, மற்ற போலீசு நிலையங்களுக்குச் செய்தி கொடுத்தேன். வழக்கமான கொள்ளைக்காரர்களின் நடவடிக்கைகளைக் கவனிக்கச் செய்தேன்.

ஆறு வாரங்கள்வரை, எத்தகைய புலனும் அகப்படவில்லை. போலீசு இலாகாவின் பேரில் பொதுமக்களுக்கு அவநம்பிக்கை கொள்ளும் நிலை ஏற்பட்டது. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல, எனக்கு இருந்தது. திடீரென ஒருநாள் காலை, கல்கத்தாவிலிருந்து செய்திவந்தது, சந்தேகப்படத்தக்க முறையில் தென்னாட்டுக்காரன் ஒருவன் ஒரு ஓட்டலில் அவனுடைய வசதிக்கு மீறிய அளவில் செலவு செய்து கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. நான் விரைந்து சென்று, அவனைப் பிடித்தேன். நல்ல குடிபோதையில் அவன் இருந்தான். காணாமற்போன நோட்டுகள் சில அவன் அறையில் இருந்தன. நோட்டுக்கத்தைகளின் மேல் பாங்க் கிளர்க் கையெழுத்திட்ட சில குறிப்புகள் இருந்தன. அவனைக் கைது செய்து, சென்னைக்கு இழுத்து வந்தேன்.

அவன் பெயர் கோவிந்தன். இதற்குமுன் நாலைந்து திருட்டுக் குற்றங்களிலும், ஒரு வழிப்பறியிலும் அவன் சிக்கியிருக்கிறான். அவனைப் பிடித்து வைத்துக் கேட்க ஆரம்பித்ததும், மற்ற மூன்று பேர்களும் தெரிந்தன. அவனுடன் சேர்ந்து, கிட்டு, ஏகாம்பரம், கட்டை கந்தசாமி ஆகிய மூவரும் வந்திருக்கின்றனர். கிட்டு, ஏகாம்பரம் இருவரும் பழைய குற்றவாளிகள். ஆனால் கட்டை கந்தசாமி, இதற்குமுன் அகப்படாதவன். நல்ல வசதியுடன், பெரிய வீட்டில் அவன் ஆடம்பரமாக வாழ்ந்தான். இரும்புக் கடையொன்று அவனுக்கு இருந்தது. கள்ள நோட்டு அடிப்பதாக அவனைப் பற்றி ஊரில் பேசிக்கொண்டார்கள். இந்தச் சாக்கில் அவன் வீடு பூராவையும் சோதனை போட்டேன். எதுவும் அவனுக்கெதிராகச் சொல்லும்படி கிடைக்கவில்லை.

காணமற்போன ஒரு லட்சத்து இருபத்து மூவாயிரத்தில், இருபத்தெட்டாயிரம் வரை மீட்கப்பட்டது, ஒரு மூவாயிரம் ரூபாய்கள் செலவழிக்கப்பட்டுவிட்டன. ஒருலட்சத்துக்குக் குறைவாக, கட்டை கந்தசாமியிடம் தங்கிவிட்டது. கொள்ளையடித்துவந்த மறுநாள், மற்ற மூவருக்கும் பத்தாயிரம் ரூபாய் தலைக்குக் கொடுத்து அனுப்பிவிட்டான். கோவிந்தனும் கிட்டுவும் கொள்ளையடிப்பதில் தாங்கள் சம்பந்தப்பட்டதை ஒப்புக்கொண்ட போதிலும், கட்டை கந்தசாமி மட்டும் ஒப்புக்கொள்ளவேயில்லை. தனக்கும் அந்தக் கொள்ளைக்கும் சிறிதுகூடச் சம்பந்தமில்லையென்றும், அவர்கள் தன்னைப் பயமுறுத்திப் பணம் கேட்டதாகவும் தான் மறுத்ததால், அவர்கள் வீண் பழி சுமத்துவதாகவும் கட்டை கந்தசாமி சொன்னான். நான் அவனையும் கைது செய்து கொண்டு போனேன். "நீங்கள் செய்வது தவறு, நான் நிரபராதி!" என்று அவன் சொன்னான். சிறையிலிருந்தபொழுது கூட அவன் சிறிதும் கலக்கமடையாமல் தைரியமாக இருந்தான். கட்டை கந்தசாமிக்காக வாதாட ஒரு பிரபல வக்கீல் முன்வந்தார்.

• கட்டை கந்தசாமியைப்பற்றி இங்கு சிறிது சொல்லவேண்டும். ஐந்தரை அடி உயரத்தில், நல்ல கட்டையான உடலுடன் அவன் இருந்ததால், "கட்டை கந்தசாமி" என்ற பெயர் ஏற்பட்டது. அதற்கு முன் பல வழக்குகளில் அவன் பெயர் அடிபட்டிருக்கிறது. மூன்று வழக்குகளில் அவன் சேர்க்கப்பட்டான். ஆனால் சரியான சாட்சியங்கள் இல்லாததால், அவன் தப்பிக்கொண்டான். அவனைப்பற்றிய அவநம்பிக்கை போலீசுக்கு இருந்த போதிலும், ஒவ்வொரு வையும் அவன் எப்படியோ தப்பித்துக்கொண்டான்.

சாட்சியங்களைச் சேகரிப்பதில், நான் தீவிரமாக இருந்தேன். கட்டை கந்தசாமி, கோவிந்தன், கிட்டு, ஏகாம்பரம் ஆகிய நான்கு பேர்கள் முகத்திலும் துணியைக் கட்டி, மற்றும் இருபதுபேர் மத்தியில் அவர்கள் முகத்திலும் துணியைமூடி—வைத்தேன். காஷியரும் பாங்கு கிளர்க்குகளும் கட்டை கந்தசாமியைச் சுலபத்தில் கண்டு பிடித்துக் கொடுத்தார்கள், கட்டை கந்தசாமி இந்தத் தடவை நிச்சயம் தண்டிக்கப்பட்டுவிடுவான் என்ற நம்பிக்கையுடன் நான் வேலை செய்துகொண்டிருந்தேன்.

வழக்கு விசாரணைக்கு வரும் நாள் அண்மியது. கோவிந்தனும், கிட்டுவும் குற்றத்தை ஒப்புக்கொண்டு, அப்ரூவர்களாக மாறினார்கள். ஏகாம்பரமும் கட்டை கந்தசாமியும் ஒப்புக்கொள்ளவில்லை. வரவர, அதிகமான சாட்சிகளும் புலன்களும் எங்களுக்குக் கிடைத்தன. அவர்கள் அணிந்திருந்த முகமூடிகள், கொள்ளையடித்தவர்கள் ஏறிச்சென்ற கார், அவர்கள் மறைந்து வந்த இடங்கள் எல்லாம் தெரிந்து விட்டன. வழக்கு மிகக் கோர்வையாகவும், நேர்மையாகவும் இருந்தது. அவர்கள் அனைவரும் இதில் தண்டிக்கப்படுவது உறுதி என நாங்கள் நம்பினோம். கட்டை கந்தசாமியின் கொட்டம் இத்துடன் அடங்கி

...டும் என்று போலீச இலாகாவே ஒருவகையில் ஆறுதலடைந்தது. மிக மர்மமாக இருந்த வழக்கைத் துப்புத் துலக்கிவிட்டோமென்று நானும் மகிழ்ச்சியுடனிருந்தேன்.

வழக்கு விசாரணைக்கு வந்தது. பிரபல பாங்கு கொள்ளை வழக்கு என்ப் பெயர் பெற்றிருந்ததால், நீதி மன்றத்தில் கூட்டம் அதிகம் இருந்தது. சர்க்கார் தரப்பில் பிராசிகியுட்டர் வழக்கை ஆரம்பித்தார். அப்ரூவர் இருவரும் முதலில் சாட்சியம் கொடுத்தார்கள், பின்பு பாங்கு காஷியர், கிளர்க்குகள், கூர்க்கா, பக்கத்திலிருந்த வெற்றிலைபாக்குக் கடைக்காரன், அந்த நேரத்தில் அந்தப் பக்கம் வந்த ரிக்ஷாக்காரன், வந்தவழியில் மோட்டாருக்குப் பெட்ரோல் போட்ட இடத்தில் வேலை பார்த்தவன், மயக்கம் போட்ட கூர்க்காவைப் பரிசோதித்த டாக்டர், இப்படி பல சாட்சிகள் விசாரிக்கப்பட்டன. கட்டை கந்தசாமியின் வக்கீல் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிலசாட்சிகளை மட்டும் குறுக்குவிசாரணை செய்தார். முதலிலிருந்து கடைசிவரை வந்த சாட்சிகள், கட்டை கந்தசாமியின் முகத்தைச் சரியாகப் பார்த்ததில்லை. அப்பொழுது முகம் மூடியிருந்த காரணத்தால், நேரில் பார்த்ததாகச் சொல்லமுடியவில்லை. அதும்மாதிரி இடங்களில், கந்தசாமியின் வக்கீல், குறுக்கு விசாரணை செய்தார். அந்த சாட்சிகள் போனாலும், அப்ரூவர்கள் தந்த சாட்சியத்தில் கட்டை கந்தசாமியை நேரில் பார்த்தது குறிக்கப்பட்டுள்ளது. அந்த சாட்சியத்தை அவர்கள் தரப்பில் விசாரணை செய்யவில்லை. குறுக்கு விசாரணை நடத்தியபொழுது கூட, ...ப்புக்காக இரண்டொரு கேள்விகள் போடப்பட்டன. வழக்கு ...ன்பக்கம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை கந்தசாமியின் வக்கீலுக்கு ஏற்படவில்லை போலும்! அதனால்தான் நான் எதிர்பார்தத சாட்சிகளைக்கூட அவர் அதிகம் மடக்கவில்லை. பிராசிகியுசன் பக்கம் சாதகமாக வழக்குப் போய்க்கொண்டிருந்தது.

குற்றச்சாட்டுக்கு ஆதாரவான சாட்சியங்கள் முடிந்ததும், குற்றவாளிகள் பக்கம் விசாரணை திரும்பியது. ஏகாம்பரம் தான் குற்றவாளி அல்லவென்று கூறினன். கட்டை கந்தசாமியும் அவ்வாறே வாதிட்டான்.

பிராசிகியுசன் தரப்பில் தரப்பட்ட சாட்சியங்களின் பலத்தை வைத்துக்கொண்டு, நான் மிகுந்த நம்பிக்கையுடனிருந்தேன். கட்டை கந்தசாமியின் வக்கீல் சொன்னது எங்களைத் திடுக்கிட வைத்தது. அவர் சொன்னார்: "கட்டை கந்தசாமியின் மீது போடப்பட்டுள்ள வழக்கு அபாண்டமானது. இந்த பாங்குக் கொள்ளைக்கும் கந்தசாமிக்கும் சிறிதுகூட சம்பந்தமில்லை. பாங்குக்கொள்ளை நடந்தது, ஏப்ரல் மூன்றுந்தேதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு! ஆனால் அதே நேரத்தில் கந்தசாமி இந்த ஊரில் கிடையாது என்று நிரூபிக்க முடியும்."

குற்றவாளிகள் வழக்கமாகக் கொண்டுவருகிற "அலிபி" சாட்சியங்கள்! அதை நாங்கள் அதிகமாகப் பொருட்படுத்தவில்லை.

"கொள்ளை நடந்த அன்று, கந்தசாமி காஞ்சிபுரத்தில் இருந்திருக்கிறர். அதற்கு சின்னக் காஞ்சிபுரம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும், அங்கு இருக்கும் டிராபிக் போலிஸ்காரருமே சாட்சிகள்!"

நாங்கள் அயர்ந்து விட்டோம். காஞ்சிபுரம் சென்று நான் விசாரித்தேன். கொள்ளை நடந்த அன்று, கட்டை கந்தசாமி ஒரு காரை ஓட்டிக்கொண்டு அங்கு சென்றிருக்கிறன். வேகமாக வந்து கடக்க முயன்றதால், "பீட்" நின்ற போலீஸ்காரன் தடுத்து நிறுத்தி எச்சரிக்கை செய்ய இருவருக்கும் வாக்குவாதம் உண்டாகி முரட்டுசுபாவமுள்ள கந்தசாமி போலீஸ்காரனை அடிக்கப்போக, மற்றவர்கள் தடுத்து போலிஸ்டேஷனுக்கு அழைத்துப்போய், குற்றஞ் சாட்டியிருக்கிறர்கள். இதற்கு ஆதாரமான போலீஸ் நிலையப் புத்தகங்களைப் பார்த்தேன். கந்தசாமியின் பெயரும், இருக்குமிடம் ஆகிய விவரங்களும் குறிக்கப்பட்டிருந்தன. போலிஸ்காரனுக்கும் கந்தசாமிக்கும் வாக்குவாதம் உண்டானபொழுது மணி 4 இருக்குமாம். அவன் அந்த இடத்தைவிட்டு முக்கால்மணி நேரங்கழித்து சென்னை நோக்கிக் கிளம்பினன்.

காஞ்சிபுரத்தை விட்டுக் கந்தசாமி கிளம்பியது நான்கே முக்கால்மணி, சென்னையில் கொள்ளை நடந்தது ஐந்துமணி! கால்மணி நேரத்துக்குள் ஐம்பதுமைல் தூரத்தைத் தாண்டி அவன் வந்திருப்பது முடியாத காரியம்! ஆக அவனை கொள்ளையுடன் சம்பந்தப்படுத்தி, அப்ரூவரும் சாட்சியங்களும் சொல்லியது சரியல்ல!

மிகச் சிரமப்பட்டுக் காட்டிய வழக்கு உடைத்துவிட்டது. நான் சோர்ந்து உட்கார்ந்தேன். வெற்றிப் புன்னகையுடன் கந்தசாமி எங்கள் பக்கம் பார்த்தான். வழக்குத் தள்ளப்பட்டது, கந்தசாமி விடுவிக்கப்பட்டான்.

இரண்டு வாரம் எனக்குச் சரியான தூக்கம் கிடையாது. மிகப் பலமான கேஸ் வெகு எளிதில் முறிந்து விட்டதே என்ற ஏமாற்றம், அத்துடன் முதலாவதாகச் சென்னைக்கு வந்ததும் இந்தக் கேலிப்பட்டத்தைக் கட்டிக்கொண்டோமே என்றஎண்ணம். தான் ஊரிலில்லை என்பதை அவன் முதலிலேயே கூறியிருக்கலாம் வேடிக்கைக் காட்டுவதுபோல, வழக்கில் எதிர் சாட்சியங்கள் முடியும்வரைக் காத்திருந்து அவன் சொன்னது கேலி செய்ய அன்றி, பிறகென்ன? நான் படுத்தபடி நீண்டநேரம் யோசிப்பதுண்டு. ஒருவேளை, ஹெலிகாப்டர் விமானம் ஏதாவது பதுக்கி வைத்திருந்து, கால்மணி நேரத்தில் அங்கிருந்து இங்கு ஓடிவந்திருப்பானே என்று தோன்றும். காஞ்சிபுரத்தில் இருந்தவன் கால்மணி நேரத்தில் எப்படித் திடீரென்று இங்கு வந்திருக்கக் கூடும் என்று என்னல் ஊகிக்க முடியவில்லை. எவ்வளவுதான் சுற்றிச்சுற்றி வந்தாலும், அவன்தான் பாங்குக் கொள்ளையை நடத்தியிருக்கவேண்டுமென்று எனக்குப்பட்டது. ஒருவேளை பாங்குக்கொள்ளையை நடத்திவிட்டு, காஞ்சிபுரத்திலிருக்கும் சப் இன்ஸ்பெக்டருக்கும் கான்ஸ்டேபிளுக்கும் இலஞ்சம் கொடுத்துவிட்டானே என்று தோன்றியது.

பலவித காரணங்கள், சிக்கல்கள் என் மனதில் தோன்றி மறைந்தன. பள்ளியில் கணக்கு போடும்பொழுது ஏதாவது வழிதவறிவிட்டால், சீக்கிரத்தில் முடிவுவராமல் சிக்கலாகித் திண்டாட வேண்டியிருக்கும். அதைப்போல நானும் அந்தப் பாங்குக் கொள்ளைவழக்கில் திண்டாடினேன். அந்தச் சமயம் என் பள்ளிக்கூட வாத்தியார் சொல்வது ஞாபகத்துக்கு வந்தது. "ஏதாவது மயக்கம் வந்தால், ஆரம்பத்துக்குப் போய் அடிப்படை வாய்ப்பாடுகளிலிருந்து கவனிக்கவேண்டும் என்று சொல்வார். அந்த அறிவுரை என் நினைவுக்கு வர, மறுநாள்காலை அலுவலகம் சென்றதும் கட்டை கந்தசாமி பற்றிய தாள்களை எடுத்துவரச் சொன்னேன். அதுவரை தெரிந்தவற்றையெல்லாம் மறந்துவிட்டு, புதிதாக வந்தவனைப்போல் ஒவ்வொன்றாகக் கவனித்தேன்.

முதலில் பெயர் போட்டிருந்தது. எந்தெந்த மாறு பெயர்கள் அவன் வைத்திருந்தானே அவற்றையெல்லாம் ஒன்ருக எழுதி வைத்தேன்,

அடுத்தபடி "தந்தை பெயர் மாணிக்கம்" என்றிருந்தது.

"ஊர்: புத்தூர் திருச்சி" இந்த இரண்டிலும் எல்லா தாள்களிலும் மாறுதல் இல்லை.

"பிறந்த ஊர்: திருச்சி" அதையும் தள்ளி வந்தேன்.

"பிறந்த தேதி!" அந்த கேள்விக்கு முன், "38" போடப்பட்டிருந்தது. வயது போட்டிருந்தார்கள். சரிமேலே பார்க்கலாம் என்று நினைத்து மேற்கொண்டு பார்த்தேன். ஆனல் "பிறந்த தேதி" என்று கேட்கப்பட்ட பொழுது சரியான பிறந்த தேதியைப் போடாமல், உத்தேசமான வயதை ஏன் தரவேண்டும் என எனக்குத் தோன்றியது வழக்கைப் பொறுத்தவரை இரண்டும் ஒன்று தான் என்ற போதிலும், பிறந்த தேதியைச் சரியாகப் போட்டு விடலாமே என்று மற்ற தாள்களைக் கவனித்தேன். சரியான தேதி கிடைக்கவில்லை, ஓரிடத்தில் மட்டும் அவன் பிறந்த தமிழ்மாதம் ஆண்டு போடப்பட்டிருந்தது. சரியான பிறந்த தேதியைத் தெரிந்துகொண்டு ஆகப்போகிறதில்லை. இருந்தாலும், வேறு வேலை யில்லாததால் அவன் பிறந்த இடத்திலிருந்த பிறப்பு இறப்பு பதிவாளருக்கு எழுதி, அவன் பிறந்த மாதத்தை உத்தேசமாகக் கொடுத்து, அவர் பதிவு ஏட்டிலிருந்து சரியான பிறந்த தேதி, தாய் தந்தையர் விவரங்களை அனுப்புமாறு கேட்டிருந்தேன். ஒரு வாரத்தில்-அந்தக் காலத்தில் இப்பொழுது இருப்பதை விடத் தாமதம் குறைவாக இருந்தது-பதில் வந்தது. பதிவான தேதி, தந்தை பெயர் தாய் பெயர், குழந்தை பிறந்த தேதி, மணி, ஆண் அல்லது பெண்ணு! என்ற விவரங்கள் குறிக்கப்பட்டிருந்தன.

ஒருமாதங்கழிந்தது. பாங்குக் கொள்ளை பற்றிய சந்தடி சற்று அடங்கியது. கந்தசாமியைப் பார்க்கும் பொழுது, நான் வணக்கங் கூறுவேன். அவன் புன்னகையுடன் வணக்கஞ் செலுத்திப் போவான். வெற்றியில் திளைத்திருந்த அவன் புன்னகையுடன் பேசுவதில் அதிசயமில்லை! நானும் தோல்வியைத் தாங்கிக்கொண்டு அடங்கியிருந்தேன். அடங்கியிருப்பதாக வெளிக்குக் காட்டிக்கொண்டேனே யன்றி, முக்கியமான பாங்குகள், நகைக் கடைகள் இவைகளில் சாதாரண உடையுடன் துப்பறியும் போலீசினர் பலரைப் பாதுகாப்பாக வைத்திருந்தேன்.

போலீசு இலாகாவினருக்கான பந்தயப் போட்டிகள் நடைபெற்றன. கடைசியாகப் பரிசு வழங்கும் நாள் வந்தது. அதற்குப் பலருக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது, கட்டைக்கந்தசாமி உள்பட!

குறித்தநாள் வந்தது. பரிசளிப்பு விழாவுக்கு போலீசுக்காரர்களும் போலீசு அதிகாரிகளும் ஏராளமாகக் கூடியிருந்தனர். நான் எதிர்பார்த்தபடி கந்தசாமியும் வந்தான். நானே அவனை வரவேற்றேன், உள்ளே போய் உட்கார்ந்தான். எல்லோர் கண்ணிலும் படும்படியான இடத்தில் அவன் உட்கார்ந்தான். அவன் ஏதோ பரபரப்புடன் இருக்கிறன் என்பது மட்டும் எனக்குத் தெரிந்தது. அந்தக் கூட்டத்தில், அவன் ஒருவனை மட்டும் கண் காணித்தபடி நான் இருந்தேன்.

திடீரென்று போலீசு இலாகா கம்பியில்லாத் தந்தி மூலம் எனக்குச் செய்தி வந்தது. ஒரு பெரிய நகைக்கடையில் கொள்ளையடிக்க இரண்டு பேர்கள் முகமூடியுடன் துப்பாக்கியை காட்டி மிரட்டியதாகவும், சாதாரண உடையுடன் சுற்றிய துப்பறியும் இலாகாவினர் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியால் அவர்களுடைய கையில் சுட்டு பிடித்து விட்டார்

அமெரிக்காவை நோக்கி காவடி!

—(0)—

திட்டத்துக்கு நிதி சேர்க்க பரதேச யாத்திரை!

—(0)—

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் காவடி தூக்கிக் கொண்டு கிளம்ப இருக்கிறார்! அவர் தூக்கிச்செல்லப் போவது டாலர் காவடி! அமெரிக்காவை நோக்கிப் புறப்படுகிறார், கேட்கப்போவது "டாலர்" உதவி!

பண்டாரம் தூக்குவது அன்னக்காவடி, மணி அடித்து, "அரகர மகாதேவா!" எனக் குரலெழுப்பி, அன்னதானம் கேட்பது அன்னக்காவடி!

அதேபோல், மணியோசையை முதலில் கேட்கச் செய்து, "அமெரிக்கமாதேவ! டாலர் தேவனே!" எனக் குரலெழுப்பி, டி. டி. கே அமெரிக்கா புறப்படுகிறார்!

இதற்கு முன்னதாக இலண்டன் மாநகரை நோக்கி, வி கே. கிருஷ்ணமேனன் "ஸ்டர்லிங்" காவடி தூக்கினார்! கிருஷ்ணமேனனுக்கு அடுத்தபடியாக அவரது அரசியல் குரு பண்டிதநேரு, நேரில் இன்னும் பெரிய காவடியாகப் பார்த்துத் தூக்கிச்சென்றார்! இங்கிலாந்துக்கு இந்தியாவிடமுள்ள பாசத்தைப்பற்றி பத்திரிக்கைகள் பலவாருகப் புகழ்ந்தன! காமன்வெல்த் நாடுகளின் தலைமைப்பீடமாக விளங்கும் இலண்டன், இந்தியாவுக்கு நிச்சயம் உதவிசெய்யும் என்று எதிர்பார்த்தார்கள்! அவ்வாறு எதிர்பார்த்துதான் காவடிதூக்கிக்கொண்டு மேனனும் நேருவும் சென்றார்கள்! வருகிறவர்களை ஆவலோடு வரவேற்றார்கள், அனுதாபத்தோடு விசாரித்தார்கள், மிகுந்த பாசத்துடன் போகச் செய்தார்கள்! வரவேற்புக்குக் குறைவில்லை, வாய்ச் சொல்லுக்கும் குறைவில்லை! 20 கோடி பவுன் (260 கோடி ரூபாய்) கடன் கிடைக்கப்போகிறது, 10 கோடி பவுன் (130 கோடி ரூபாய்) நிச்சயம் கிடைக்கும் என்று பத்திரிக்கைகள் ஆருடங்கள் கூறின. கடைசியாக இங்கிலாந்திடமிருந்து எதுவும் கிடைக்கவில்லை.

காவடி தூக்கிவந்த பண்டாரத்துக்கு ஊரிலே நல்ல மதிப்பு! அந்தப்பண்டாரம் வருகிற தென்றால், வீட்டாரெல்லாம் வீதியில் வந்து வரவேற்கிறார்கள்! "பண்டாரத்தின் கோலமே கோலம்! பாடலேபாடல்!" என்று பாராட்டுகிறார்கள்! இவ்வளவு பெருமையும் புகழும் இருந்தும் கடைசியாக ஊர் சுற்றி, திரும்பி மடத்துக்குப் போய் பார்த்தால், காவடியில் ஒரு பருக்கைச் சோறுகூட இல்லை! அதுபோலகடன்கேட்க ஐரோப்பிய நாடுகளைச்சுற்றிக் கொண்டு நேருபண்டிதர் இங்கிலாந்தில் போய்ச் சேர்ந்தார். கடன் பேச்சுகள் நடைபெற்றன. இங்கிலாந்துக்காரர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பாராட்டி, தாலாட்டி, திருப்பியனுப்பிவிட்டார்கள்!

"இங்கிலாந்து தராவிட்டால் என்ன, நான் அமெரிக்காவுக்குப் போய் கொண்டு வருகிறேன்!" என்று அடுத்த கட்டளைத் தம்பிரானாக இருக்கிற கிருஷ்ணமாச்சாரியார் காவடியைத் தூக்கிவைத்துக் கொண்டு கிளம்புகிறார்!

இவர் அமெரிக்காவுக்கு போவதற்கு முன்னால், மடத்து தர்மகர்த்தாக்களாக விளங்குகிற சிலர்-பிர்லா போன்றவர்கள் அமெரிக்காவுக்குப் போயுள்ளார்கள். "இப்படி ஒரு பண்டாரம் வரப்போகிறது; உங்களால் ஏதாவது முடிந்தால் அதுக்குப் போடவேண்டும்" என்று கேட்டுக் கொள்ள பிர்லாக்கள்போயிருக்கிறார்கள். இந்திய முதலாளிகள் முன் கூட்டிப் போனதற்குக் காரணம் என்ன வென்றால், "அவர்களால் தான அமெரிக்க முதலாளிகளிடம் அவர்கள் மொழியில் பேசமுடியும்" என்று ஒரு பம்பாய் பத்திரிக்கை கூறுகிறது. அதாவது உதவிதரச் சொல்லி, இந்த நாட்டு முதலாளிகள் பேரம் பேசி வைத்திருப்பார்கள்! கிருஷ்ணமாச்சாரியார்சென்று, அந்த பேரத்தை முடித்து வைத்து, கிடைத்த கடனை "காவடியில்" போட்டு வருவார்!

பிர்லா அங்கு போய் அமெரிக்க முதலாளிகளிடம் பேரம் பேசுகிறார், இங்கு கிருஷ்ணமாச்சாரியார் தயாராகிக்கொண்டிருக்கிறார்! இந்தநிலையில் "எவ்வளவு டாலர் உதவி வந்தால் நல்லது?" என்பது பற்றி பண்டிதநேரு பேசுகிறார். 50 கோடி அல்லது 60 கோடி டாலர் உதவி கிடைத்தால் போதும் என்று பண்டிதர் அமெரிக்காவை மனதில் வைத்துக்கொண்டு பேசுகிறார். அமெரிக்க நாட்டு அரசாங்கக் காரியதரிசியும் இந்தியா கேட்கும் கடனை நல்லமுறையில் கவனிப்பதாகக் கூறியிருக்கிறார். ஆக அமெரிக்காவிலிருந்து இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு 50 கோடி டாலர் அதாவது 240 கோடி ரூபாய் அளவுக்கு உதவி கிடைக்கக் கூடும்! இந்தக் கடன் கேட்கப் போகும் பொழுது, அமெரிக்கா கேட்கும் பல அரசியல் கேள்விகளுக்கு இந்திய நிதி மந்திரி திருப்திகரமாகப் பதில் சொல்லியாக வேண்டும்! உலக அரங்கில் இந்தியாவின் அரசியல் கொள்கைகள் அடிக்கடி முரண்பட்டு மாறுபடுகின்றன! ருஷியாவிடம் பேசும்பொழுது ஒரு போக்கையும், அமெரிக்காவிடம் கடன் கேட்கும்பொழுது ஒரு கொள்கையையும் இந்திய அரசாங்கம் ஏற்படுத்திக்கொள்கிறது. இதனால் மற்றநாடுகள் ஏமாறுகின்றனவோ என்னவோ, முதலில் இந்தியா தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்கிறது!

இவ்வளவுக்கும் காவடி எடுத்தும், கரணங்கள் போட்டு வேடிக்கை காட்டியும் இவர்கள் எதிர்பார்க்கிறஉதவித்தொகை 240 கோடி ரூபாய்! இந்த எதிர்பார்க்கும் தொகையில் இவர்களுக்கு எவ்வளவு கிடைக்கப் போகிறது என்பது நமக்குத் தெரியாது! இவ்வளவு அரும்பாடுபட்டு 240 கோடி ரூபாய் கடனை அவர்கள் பெற்றுவிட்டார்களென்றாலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு அது போதாது!

இரண்டாவது திட்டத்திற்கு அதைத் தீட்டிய திட்டக்குழுவினர் எதிர்பார்த்த வெளிநாட்டுக் கடன் தொகை மொத்தம் 800 கோடி ரூபாய்! இந்த 800 கோடிரூபாய், திட்டத்தின் அளவு 4800கோடி ரூபாயாக இருந்த பொழுது! இப்பொழுது அந்த 4800கோடி ரூபாய், 5500 கோடி ரூபாய், 6000 கோடி ரூபாய் என்று உயர்ந்து கொண்டு போகிறது! ஒரு புறம் திட்டத்தின் செலவுத் தொகை உயர்கிறது, இன்

...சம்! நான் இதை எதிர்பார்த்ததுதான்!

பதிலுக்கு "அந்த இரண்டு பேரில் ஒருவன் கட்டை கந்தசாமியா?" என்றேன்.

"ஆமாம், உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று கேட்டார்கள்.

நான் பதில் சொல்லாமல், உள்ளேபோய் முன் வரிசையில் உட்கார்ந்திருந்த கந்தசாமியைக் கைது செய்தேன்.

பலருக்குத் திகைப்பாக இருந்தது. "ஏன், எதற்காக?" என்று கேட்டார்கள்.

"கமலா நகைக்கடையில் கொள்ளையடிக்க முயன்றதற்காக!"

"எப்பொழுது?"

"ஐந்துநிமிடங்கள்முன்பாக!"

"அரைமணி நேரமாக அவர் இங்குதான் இருக்கிறார்!" என்று பக்கத்திலிருந்தவர் சொன்னார்.

"கந்தசாமியால் இங்கும் உட்கார்ந்திருக்க முடியும், கொள்ளையடிக்கப் போகவும் முடியும்!" என்றேன். மற்றவர்களுக்குப் புரியவில்லை. கந்தசாமியைப் பார்த்து "உனக்கும் நான் சொல்ல வேண்டுமா?" என்று கேட்டேன்.

"அவசியமில்லை!" என்று கட்டை கந்தசாமி என்னுடன் வந்தான்.

கட்டை கந்தசாமியை அழைத்துக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குள் போன பொழுது, வெளியில் காத்துக் கொண்டிருந்த சப்-இன்ஸ்பெக்டர் மலைத்துப் போய், "எப்படி, இப்பொழுதுதானே டாக்டரிடம் கட்டுக்கட்ட கந்தசாமியை அனுப்பினேன். உங்களுடன் எப்படி வந்தான்?" என்று குழம்பினார்.

"இந்தக் கந்தசாமி வேறு; கொள்ளையடிக்க வந்த கந்தசாமி வேறு! இருவரும் வேறு வேறு, அதே சமயத்தில் ஒன்று! இதுவரை ஒரே கந்தசாமி என்று நினைத்து நாம் ஏமாந்தோம். கந்தசாமி இரண்டு உருவில் உலவுகிறான். அதாவது, உங்களிடம் அகப்பட்டவனும், உங்கள் முன் நிற்பவனும் இரட்டைச் சகோதரர்கள், ஒரே அச்சாக இருப்பவர்கள்! இதுவரை ஒருவன் பாங்குக் கொள்ளையடிக்க வந்தால், மற்றொருவன் காஞ்சிபுரத்தில் வேண்டுமென்று கலகஞ் செய்து தான் அங்கிருந்ததற்கு அத்தாட்சித் தயாரித்து விடுவான்! இன்றைக்கு அதே மாதிரி நடந்திட முயன்றான்! முன்னேற்பாடாக நான் நடந்ததால், இந்தச் சூதைக் கண்டு பிடிக்க முடிந்தது!" பிறகுவழக்குநடைபெற்றது, அவர்கள் இருவருக்கும் ஆறு ஆண்டுச் சிறைத் தண்டனை கிடைத்தது. பாங்குக் கொள்ளையிலும், அதற்கு முன் நடந்த கொள்ளைகளிலும் அவர்கள் எடுத்த பணத்தில் பெரும் பகுதி பின்பு கண்டு பிடித்து, உரியவர்களிடம் சேர்க்கப் பட்டது"

துப்பறியும் துரைசாமி கதையை முடித்தார்.

"இரட்டைப் பிள்ளைகள் இருக்கிறார்கள் என்பது உங்களுக்கு எப்படித் தெரிந்தது" என்று கதை கேட்டுக்கொண்டிருந்த நல்ல முத்து கேட்டார்.

"அதைச் சொல்ல மறந்துவிட்டேனா? பிறந்த தேதி விவரத்தைப் பற்றி பிறப்பு-இறப்புப் பதிவாளர் ஏட்டில், 'குழந்தை' என்பதற்கு முன் 'இரட்டைக் குழந்தைகள்; ஆண்கள்' எனப் போடப்பட்டிருந்தது. நான் சரியான பிறந்த தேதி தேடப்போய், இரட்டையர்கள் இருக்கிறார்கள் என்ற உண்மை எனக்குத் தெரிய வந்தது" ©

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் செய்தியைக் கேட்டவுடன், செவிலிக்குத் தம்மகள் மருமகன் பற்றிய நினைவு வருகிறது. அவர்களிருவரும் இவ்விளங் காதலர்கள் எதிரே போயிருக்கக்கூடும், அவர்களை இவர்கள் கண்டிருக்கக்கூடும் அவர்களைப்பற்றி இவர்களைக் கேட்டால் உண்மை தெரியக்கூடும் என்று கருதிக்கொண்டு முதலில் இவர்கள் தங்கியிளைப் பாறுவதற்கு வசதிகள் செய்துதரவேண்டும் என்று எண்ணுகிருள்.

"நீங்கள் இருவரும் வெயிலின் வெம்மையால் மிகக்களைத்துக் காணப்படுகிறீர்களே; இங்கே தங்கியிருந்து இளைப்பாறிவிட்டுச் செல்லலாமே!" என்கிருள் செவிலி.

"இந்த ஊரில் யாரிருக்கிருர்கள்?" என்று வினவுகிருன் இவ்விளைஞன்.

"இவளைப்போலவே எனக்கு ஒரு வளர்ப்பு மகள் உண்டு. இவளைக் கண்டால் அவளது நினைவுதான் எனக்கு வருகிறது. அவளது தந்தைதான் இந்த ஊரில் மாளிகை கட்டிக்கொண்டு வாழ்கிருர். நீங்கள் வந்தால் மாளிகையிலேயே தங்கி இளைப்பாறலாம்!" என்கிருள் செவிலி.

"நாங்கள் வர அத்தந்தை யார்ஏற்றுக்கொள்ளுவாரோ?" என்று கேட்கிருன்.

"செல்வச் சிறப்பு பொருந்திய உங்களிருவரையும் வரவேற்கிற அளவுக்கு அவர் செல்வ வளமும், அளந்தறியா வள்ளல் தன்மையும் கொண்டவர். நீங்கள் அவருடைய தோற்றத்தைக் கண்டாலே அவர் மதிப்பிற்குரிய பெரியவர் என்பதை அறிந்துகொள்வீர்கள். அவர் கறுத்த மீசையையும், வலியபிடரியையும், நெடிய கையையும், வலிய வில்லையும் அம்பையும் உடையவராக இருப்பார். அவருடைய மாளிகையில் கள்ளுணவு மிகவுண்டு. நீங்கள் இருவரும் வந்து, இருந்து, உண்டு, களித்துச் செல்லலாம்!" என்கிருள்.

"அப்படியாளுல் வருகிருேம்!" என்று சொல்லிவிட்டு இருவரும் புறப்படுகின்றனர். செவிலியும் உடன் திரும்புகிருள்.

"தங்கள் வளர்ப்புமகள் மாளிகையில்தான் இருக்கிருளா?" என்று அவ் இளையோள் கேட்கிருள்.

"அவளைக் காணுமல்தானே நான் அவதிப்பட்டு, எங்கெங்கெல்லாமோ தேடிப் பார்க்கிறேன். அவளைப் பிரிந்த ஆற்ருமையினுல்தான், நான் கலங்கிப் போய்த் தள்ளாடி நிற்கிறேன்!" என்கிருள் செவிலி.

"அவள் எங்கு போய்விட்டாள்?" என்று விஞவுகிருள் இளையோள்.

"உன்னைப்போல்தான் அவளும் ஒரு காதலனைக் கூட்டிக்கொண்டு இவ்வழியே போய்விட்டாள் என்று ஊரார் கூறுகிருர்கள். அவளைத் தேடிப் பிடிக்கவே நான் புறப்பட்டு வந்தேன். அதற்குள் நீங்களும் வந்துவிட்டீர்கள். அவர்களை நீங்கள் வழியில் கண்டீர்களா?" என்று செவிலி விஞவுகிருள்.

"ஒரு இளம் அழகனையும் அழகியையும் கண்டோம். நெடுந் தொலைவில் போய்க்கொண்டிருக்கிருர்கள்!" என்கிருர்கள் இருவரும்.

"அவர்களைக் கண்டு பேசினீர்களா?" என்று கேட்கிருள் செவிலி.

"கண்டு பேசினேம்!" என்கிருர்கள்.

"என்ன பேசினீர்கள்?" என்ன அவர்கள் சொன்னுர்கள்? என்பதை எனக்குக் கூறுங்களேன். அறத்தாலாகும் அவ்வளவு புகழும் உங்களைச் சேருமே!" என்று செவிலி இரங்கிக் கேட்கிருள்.

தலைவன் தலைவியைக் கண்டதையும், அவர்களோடு பேசிக்கொண்டிருந்ததையும் அவ்விளங்காதலர்கள் சொல்ல, அதனைக் கேட்டுக்கொண்டே செவிலித்தாய் தள்ளாடித் தள்ளாடி மெல்ல மாளிகை போய்ச் சேர்கிருள். பெற்ருேரும், உற்ருர் உறவினரும் பிறரும் உண்மையறிந்து, செய்வதொன்றுமில்லாது அவ்வளவிலே அடங்குகின்றனர்!

* * *

இது நற்றிணை—198ஆம் செய்யுளின் கருத்தை உள்ளடக்கி வைத்துத் தீட்டப்பட்ட காதற் காட்சியாகும். இந்தச் செய்யுள் பாலைத்திணையைச் சார்ந்த 'பின் சென்ற செவிலி இடைச்சுரத்துக் கண்டார்க்குச் சொல்லியது' என்னும் பிரிவைச் சேர்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் கயமனுர் என்னும் சங்ககாலப் புலவராவார். இவர் பாலைத்திணைபற்றிய செய்திகளை மிக அழகாகப் புனைந்து கூறியுள்ளார். இவர் அன்னியும் திதியனும் போரிட்டுக்கொண்டதைப் பாடியிருத்தலால் அவர்கள் காலத்திற்குப் பிற்பட்டவர் என்று தெரியவருகிறது. இவரது பாடல்களில் வரும் செய்திகளைக் கண்ணுற்ருல் இவர் உலக வழக்கம் முற்றும் அறிந்த ஒரு பெரும் புலவர் என்பது புலப்ப... இவர் பாடியனவாக நற்றி... யில் ஆறும், குறுந்தொ... யில் நான்கும், அகத்தில் ப... னிரண்டும், புறத்தில் ஒன்... மாக இருபத்துமூன்று பா... கள் காணப்படுகின்றன.

சேயின் வருஉம் மதவலி யாஉயர்ந்து
ஓமை நீடிய கானிடை அத்தம்
முன்னுள் உம்பர்க் கழிந்த என்மகள்
கண்பட நீராழ்ந் தன்றே தந்தை
தன்னூர் இடவயின் தொழுவேன் நுண்பல்
கோடேந்து அல்குல் அரும்பிய திதலை
வாஅர்ந் திலங்குவால் எயிற்றுப் பொலிந்ததார்ச்
சில்வளைப் பல்கூந் தலளே அவளே
மையணல் எருத்தின் முன்பின் தடக்கை
வல்வில் அம்பின் எய்யா வண்மகிழ்த்
தந்தை தன்னூர் இதுவே
ஈன்றேன் யானே பொலிகநும் பெயரே [நற்றிணை-1

[பொழிப்புரை: மிக்க தொலைவிலிருந்து வருகின்ற அருமை இளைஞனே! யாமரம் உயர்ந்து ஓமை மரம் நீடிய காடு இடையிட்ட பாலை நிலத்திலே நேற்று நெடுந் தொலைவு சென்ற என் மகள்போல இவள் என் கண்ணெதிரே படுதலால் என் கண்ணீர் நிரம்பப் பெருகின்றது; அவள் தான் நுண்ணிய பலவாய வரிகள் பொருந்திய அல்குலும், தோன்றிய சுணங்கும், நேர்மையுற்று விளங்கிய வெள்ளிய பற்களும் பொருந்திய பாதிரி மலர் பிணையலும், சிலவாய வளையலும், பலவாய கூந்தலும் உடையாள்; நிற்க, உம்மை அவளது தந்தையின் ஊரிடத்தில் விருந்தேற்று உபசரித்துத் தொழ விரும்புகிறேன்; அவ்வண்ணம் உம்மை எதிர்கோடற்கேற்ற மை போன்ற கரிய மீசையையும், பிடரியையும், வலிய நெடிய கையையும், வலிய வில்லினையும், அம்பையும், அளந்தறியா வண்மையையும், கள்ளுணவையுமுடைய தந்தையினது ஊர் இதுவே கண்டீர்; நானே அவளை ஈன்று பாதுகாத்தேன்; எனது ஆற்ருமையைக் கண்ட நீவிர், அவளை எதிர்கொண்டு பேசிய வகையை சொல்லுவீராயின், நுமக்கு அறத்தாலாய புகழ் உண்டாகுக!

யா, ஓமை என்பன மரவகைகள். அத்தம் - பாலைநிலவழி; அம்பர்-நெடுந் தொலைவு; திதலை-பசலை; வார்ந்து-நேர்மை பெற்று; அணல்-மீசை, தாடி; எருத்து-பிடரி முன்பு-வலிமை.]

களவொழுக்கத்தில் ஈடுபட்டிருக்கும் காதலர்கள் பெற்ருேர், உற்ருர், உறவினர், ஊரார் ஆகியோர்க்குத் தெரியாமல் வெளியூருக்கு ஓ... போதல் உண்டு என்பது... வளர்ப்பு மகளைப் பிரிந்து வ... தும் செவிலித் தாய் அவளை... தேடிப் போவாள் என்பது... பிறகு அந்தச்செயல் அறவ... பட்ட ஒன்றுதான் என்ற ... வுக்குவந்து பெற்ருேரும், ... ரும் அடங்குவார்கள்என்ப... பண்டைத் தமிழகத்தில் கொ... ளப்பட்ட பழக்கங்களாக... காணப்படுகின்றன. தலைவ... தலைவி ஓடிப்போவது... செவிலி அவர்களைத் தே... போவதும் ஆன காதற் க... சிகள் இச் செய்யுளில் நயம... கூறப்பட்டிருக்கின்றன.

செவிலித்தாய் எதிர்ப்ப... வேற்ருர் இளையோளைக் கண்... முதலில் தன் வளர்ப்பு ம... என்று எண்ணிக் கண்ண... விடுவது, மகளிடத் தி... செவிலி கொண்டிருக்கும் அ... பின் பெருக்கைக் காட்டுவ... கும்.

கூந்தலில் பாதிரி மலர்களை... சூடுதல், பெண்கள் கைகளி... சிலவாய வளையல்கள் அ... தல், அடர்த்தியாகக் கூந்த... வளர்த்தல் விருந்து ஏற்... மகிழ்தல், ஆண்கள் கரி... மீசையை வைத்துக் கொள்... தல், கையில் வில் அம்பு ஏந்... தல், கள்ளுணவை உட்கொ... ளுதல் போன்ற பழக்கவழக்... கள் சுட்டிக் காட்டப்பட்டு... ளன.

ஒருபுறம் திட்டக்குழுவினர் எதிர்பார்த்த வெளிநாட்டு உதவி குறைந்து வருகிறது! இவர்கள் 800 கோடிரூபாய் எதிர்பார்த்ததில், 200கோடி ரூபாய் வருவதற்கே இவ்வளவு விழி பிதுங்கும் நிலை ஏற்பட்டுவிட்டது!

பண்டாரங்கள் தனியாக உட்கார்ந்துகொண்டு "இங்கொரு முற்றம், அங்கொரு வாசல், பக்கத்தில் ஒரு மடம், சுற்றிலும் ஒரு கூடம்" என்று திட்டம் போடுவதுபோல், நமது திட்டக்குழுவினர் திட்டம் போட்டுவிட்டனர்! மடங்கட்டத் திட்டம் போட்டு, கடைசியாகப் பொழுது விடிந்ததும் காவடி தூக்கிக்கொண்டு கிளம்புவதுபோல, பெரிய திட்டங்களைப் போட்டு கடைசியாக வெளிநாடுகளுக்குப் புறப்பட்டுப்போய் கடன் பிச்சைக் கேட்கவேண்டிய நிலையில் இவர்கள் நிற்கின்றனர்!

திட்டச் செலவுகளைக் கணக்கிட்டபொழுது, திட்டத்திற்கான நிதிகளை உரியமுறையில் சேர்க்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கவேண்டும்!

வெளிநாட்டு எண்ணெய்க் கம்பனிகள்!

—(0)—

ஆண்டுதோறும் கிடைக்கும் இலாபம்.

—(0)—

1956-ல் 21 கோடி ரூபாய்.

—(0)—

இந்தியாவில் பெட்ரோல், மண்ணெண்ணெய், இவற்றுடன் கூடிய மற்றவித எண்ணெய்களைத் தருவதில் மூன்று கம்பெனிகள் முக்கியமானவைகள். அவை, பர்மா-ஷெல், ஸ்டாண்டர்ட்-வாக்குவம், கால்டெக்ஸ். இந்த மூன்று கம்பனிகளுக்கும் 1956ல் கிடைத்துள்ள இலாபம் கீழ்க்கொடுக்கப் படுகிறது.

கம்பனி	1956ல் இலாபம்
பர்மா-ஷெல்	15 கோடி 38 லட்சம் ரூபாய்.
ஸ்டாண்டர்ட்-வாக்குவம்	3 கோடி 93 லட்சம் ரூபாய்.
கால்டெக்ஸ்	1 கோடி 60 லட்சம் ரூபாய்.
மொத்தம்	20 கோடி 91 லட்சம் ரூபாய்.

இந்த மூன்று கம்பனிகளுக்கு மட்டும் ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ 21கோடி ரூபாய் இலாபம் கிடைக்கிறது!

அறிஞர் அண்ணா:

அறிஞரும் கலைவாணரும் (3)

அறிஞர் அண்ணாவிடம் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பழகிய ஆரம்பத்திலிருந்தே-இன்னும் சொல்லப்போனால் பழகுவதற்கு முன்பிருந்தே மதிப்பும் பாசமும் இருந்தது. கலைவாணர் அவர்கள் "கிந்தனார்" காலட்சேபம் நடத்தி வந்த காலத்தில், அண்ணா அவர்கள் வழியில் ஏதேனும் ஊரில் தங்கியிருந்தால், சிறிது நேரம் அண்ணாவைக் கண்டு பேசிவிட்டுப் போவார். அண்ணாவுக்கு ஓய்வு இருந்தால், அவரையும் அழைத்துச் சென்று தனது காலட்சேபத்தைக் கேட்கச் செய்வார். எவ்வளவு தடவைகள் கேட்டாலும் சலிப்புறாத வகையில் "கிந்தனார்" காலட்சேபம் இருந்தமையால், அண்ணாவும் விரும்பி அந்த அழைப்பை ஏற்றுச் செல்வார்.

அதேபோல் அண்ணா நாடகம் எங்கேனும் இருந்தால், கலைவாணரும் நேரமிருந்தால் அங்கு வரத் தவறமாட்டார். அத்துடன் மற்ற நடிகத் தோழர்களையும் அழைத்து வந்து நாடகத் துறையில் புதுமைக் கருத்துகள் ஆக்கம் பெறுவதைக் காட்டி மகிழ்வார். ஒரு சமயம் சென்னையில் நடைபெற்ற "சந்திரோதயம்" நாடகத்துக்குப் பெரியார் இராமசாமி தலைமை வகித்தார். கலைவாணர் வந்திருந்தார், அவருடன் தியாகராஜபாகவதர், தண்டபாணி தேசிகர் ஆகியவர்களும் வந்திருந்தனர். நாடக இறுதியில் பெரியார் அவர்கள் "நாடகமென்றால் அண்ணாதுரை நடித்ததைப்போலிருக்கவேண்டும்! மற்ற நாடகக்காரர்கள் நடத்துகிற நாடகம் மோசம், வாங்குகிற பணம் அக்கிரமம்! முருகா! முருகா! என்று இரண்டு பாட்டைப் பாடிவிட்டு ஆயிரம் இரண்டாயிரம் என்று வாங்கிப்போவது என்ன நியாயம்! என்ன நீதி?" என்றெல்லாம் சினிமாக்காரர்களையும், நாடகக்காரர்களையும், பாகவதர்களையும் மனதில் வைத்துக் கடுமையாகப் பேசிவிட்டார். தேசிகரும் பாகவதரும் கண்கலங்க, வருத்தத்துடன் உட்கார்ந்திருந்தார்கள். கலைவாணர்மட்டும் சிரித்தபடி இருந்தார். பின்னால் அண்ணா அவர்கள் சமாதானங்கூறும் வகையில் பெரியார் பேசியதின் கடுமையைத் தனிக்கச் சில கூறினார். கடைசியாகப்பேசிய கலைவாணர், "அண்ணா எங்களைச் சமாதானப் படுத்தச் சொன்னார். அதெல்லாம் சரியில்லை. பெரியார் சொன்னது அவ்வளவும் சரியானது! சினிமாவிலும், கச்சேரிகளிலும், நாடகங்களிலும் சில மணி நேரத்துக்கு ஆயிரக்கணக்கில் பணம் கொடுக்கிறார்கள் என்பது, உண்மைதான்! ஆனால், என்னைப் பொறுத்தவரை, இப்படி பல லட்சங்கள் சேர்ந்தது உண்மையே; ஆனால் இப்பொழுது பார்த்தால் சில ஆயிரங்கள் அளவில்தான் என்னிடம் தங்கியுள்ளது. மற்றவையெல்லாம் பல இடங்களுக்கு நிதியளிப்பாகச் சென்றுவிட்டன!" என்று சொன்னார்.

சினிமாக் காரர்கள் இலட்சக்கணக்கில் பணஞ்சேர்க்கிறார்கள் என்பதில் பெரியாருக்கு எப்பொழுதும் கோபம் உண்டு. அதை அன்று பேசினார். கலைவாணர் பேசியதும், பெரியாரின் கோபம் வேறுவகையில் திரும்பியது. "என்ன அநியாயங்க! லட்சக்கணக்கில் சம்பாதித்து, ஏன் கிருஷ்ணன் இப்படி விட்டுவிடுகிறான்? எல்லாம் சுத்த மோசம்!" என்று நாடகம் முடிந்தபிறகு சொல்ல ஆரம்பித்தார். இலட்சக்கணக்கில் சேர்த்தாலும் ஆபத்து, இலட்சக்கணக்கில் கொடுத்தாலும் ஆபத்து!

தாம் பேசியதில் அண்ணாவுக்குச் சிறிது வருத்தம் என்பதை உணர்ந்த பெரியார் ஈரோட்டில் "கிந்தனார்" காலட்சேபத்தின்போது பொன்னால் மெடல் செய்து சங்கிலி கோர்த்து கலைவாணருக்கு அணிவித்தார். அந்தச் சங்கிலியை அண்ணாவிடம் காட்டி "ஒற்றை வாடைக்கா?" என்று குறிப்பாகச் சொல்லி, கலைவாணர் புன்னகை புரிந்தாராம்!

இலண்டனில் கைத்திறன் பொருட்காட்சி!

—(0)—

(நிகோலஸ் பீட்டர்ஸ்)

பொழுது போக்காக, ஒரு சிலர், சிறுசிறு பொருள்களைச் செய்து மகிழ்வதுண்டு, அவற்றின் தரமும் அழகும் பெரிதல்ல. தான் செய்ததால் கிடைக்கும் திருப்தியே அதிகம். தன் கணவன் செய்த பொருள் என்று பிறரிடம் காட்டிப் பெருமைப்படும் வாய்ப்பை, ஒரு மனைவிக்களிக்கும் கைப்பணிதான் அது. சில ஆண்டுகளுக்கு முன்பு பொழுது போக்காக கைத்திறன் பணியில் ஈடுபடுவோர் எண்ணிக்கை மிகக் குறைவு. ஆனால் இன்றுள்ள நிலைவேறு. விஞ்ஞானமும் வசதிகளும் விரிந்துள்ள இந்நாளில் மக்களுக்கு கைப்பணிப் பொருள்கள்மீது பற்றுதலேற்பட்டிருக்கிறது. கைத்திறனைப் பயன்படுத்துவதில் பலருக்கு அக்கறை ஏற்பட்டிருக்கிறது. அதனால் சிறந்த பொழுதுபோக்கும் குடும்பத்திற்குத் தேவையான பொருள்களும் கிடைக்கின்றன. இந்தத்துறையில் மக்களுக்கு ஊக்கமூட்ட, ஆண்டுதோறும், லண்டனில் கைத்திறன் பொருட்காட்சி நடைபெறுகிறது. இதில் 'நீங்களே செய்து பாருங்கள்! என்ற பிரிவு பிரபலமாகிவிட்டது.

நாளது செப்டம்பர் 19—28 தேதிகளில் லண்டன் ஏர்ள்ஸ் கோர்ட்டில் சர்வதேச கைத்திறன் பொருட்காட்சி நடக்கிறது. 'நீங்களே செய்து பாருங்கள்' பிரிவில் பல நூதன அம்சங்களைப் புகுத்தியிருப்பது இவ்வாண்டுச் சிறப்பாகும். இளைஞர் பகுதியில் தையல், அச்சுவேலை, இயந்திரப் பட்டறை முதலியவற்றுடன் விமான உற்பத்திப் பட்டறையும் இருக்கிறது. இருவர் உட்காரக்கூடிய சிறு விமானமொன்றை இணைக்கும் வசதியுள்ள பட்டறை அது. பள்ளிக்கூட பத்திரிகைகள் அச்சடிப்பதற்கான இயந்திரம், வர்ணப்படங்களை அச்சடிக்கும் இயந்திரம் என பல அச்சு இயந்திரங்களும் இந்தப் பகுதியில் உள.

வீட்டுப் பொருள்கள்

அறைச் சுவருக்குப் பூசும் வர்ணம் ஒன்றை, பத்தாண்டு ஆராய்ச்சிக்குப் பிறகு, ஓர் பிரிட்டிஷ் ஸ்தாபனம் தயாரித்திருக்கிறது. இதைப் பூசினால் கரப்பான், ஈ, பாச்சை முதலிய பூச்சிகள் செத்து விடுமாம். வர்ணத்தின் வீர்யம் சுமார் இரண்டாண்டுகளுக்கு நீடிக்குமாம்.

சமையலறையில் அடுப்பு, அலமாரி, கணப்பு முதலியவற்றை அமைப்பதற்கான சாதனங்களுள்ள ஒரு பட்டறையுண்டு. வீட்டுக்கு வேண்டிய கோப்பை, தட்டு முதலிய பீங்கான் பாத்திரங்களைத் தயாரிக்கக் கூடிய தொழிற் பட்டறை பார்வையாளர்களைக் கவரக் கூடும். களிமண், அச்சு, மெருகுப் பொருள், மின்சாரக் காளவாய், பண்டங்களின் செய்முறை கூறும் நூல் ஆகியவை அங்குண்டு.

சமையலறையிலும் வரவேற்பறையிலும் போடும்படி கழற்றிமாட்டக்கூடிய நாற்காலி மேசை முதலிய தளவாடங்கள் ஒரு பகுதியில் உள, இவற்றில் பல இரும்புக் குழாய், பிளாஸ்டிக் முதலியவற்றாலானவை.

குளிக்கும் அறையிலும் சமையலறையிலும் போடக் கூடிய பிளாஸ்டிக் வரிசைக் கற்கள், காட்சியிலிருக்கும், இவை பரப்பும்வரையில் வளையக் கூடியவையாக இருக்கும். பாப்பி சாந்து பூசி விட்டால் கெட்டிப்பட்டுவிடும். தரையிலும், துணியிலும் படியும் கறையகற்றும் மருந்து, தரையை அலங்கரிக்கும் வண்ணக் கற்கள் எனப் பல பொருள்களும் உள,

பெண்கள் விரும்பும் கைத்திறன் பொருள்களுள்ள பிரிவில், ஆடை அணிவகைகளும், ஆடைகளில் வைத்துத் தைக்கக்கூடிய ஜிகினா, சரிகைப்பூ, கல் மணி முதலியவையுமுள. இந்தப் பகுதிக்கு ஆண்களும் பெண்களும் மகிழ்ச்சியுடன் வருவார்கள் என்றே கூறலாம்.

பிரிட்டனைத் தவிர, வேறு 14 நாடுகளிலிருந்து கைத்திறன் பொருள்கள் வந்துள. அவற்றைச் செய்துகாட்ட கைவினைஞர்கள் சிலரும் வெளிநாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள்!

ஆடை அலங்காரப் பகுதியில், உடை அலங்கார அரங்கு ஒன்றை நிர்மாணித்திருக்கிறார்கள். தைத்த ஆடைகளைத் தவிர பின்னல் ஆடைகளை அணிந்து, அழகு நடை போட்டு நவீன ஒப்பனைகளைக் காணக்கூடிய வாய்ப்பு இங்கு உண்டு. கம்பள நூல்கள் பின்னிய (நிட்டிங்) ஆடைவகைகளைப் பிரபலப் படுத்த "ஹாண்ட்-நிட்டிங் உல்கௌன்சில்" தனியாக ஓர் மேடையை அலங்கரித்திருக்கிறது.

தையல்கலையைப் பிரபலப்படுத்த, பிரிட்டனில், காட்சியின் சார்பில் ஓர் போட்டி நடந்தது. 14-19 வயதுள்ளவர்களே இதில் கலந்துகொள்ள முடியும். நாடெங்கும் நடந்த இப் போட்டியில், நாற்பது பேர்களுக்கு பரிசுகளை வழங்க முடிவு செய்தார்கள். இந்த 40 பேர்களும காட்சியிலுள்ள தையல் மேடையிலமர்ந்து ஆடைகளைத் தைப்பார்கள். இவர்களுடைய திறனறிந்து, தகுதியுள்ளவர்களுக்குப் பரிசளிக்க ஓர் நடுவர்குழாம் அமைக்கப்பட்டிருக்கிறது.

திராவிடத்தைவிட குறைந்த நிலப்பரப்புடைய உலக நாடுகள்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

எண்.	நாட்டின் பெயர்.	பரப்பு (சதுர மைல்)	அரசியல் அமைப்பு.
55.	குவாண்டங்	1,444	சோவியத் ருஷியாவின் கீழ்
56.	கம்போடியா	53,668	பிரே யூனியன்
57.	லயோசு	91,428	,,
58.	ஈராக்	116,600	முடியாட்சி
59.	இஸ்ரேல்	8,050	குடியாட்சி
60.	ஜப்பான்	146,690	குடியாட்சி
61.	ஜார்டன்	39,460	,,
62.	லெபனன்.	3,475	குடியாட்சி
63.	மாலதிவ் தீவுகள்	115	முடியாட்சி
64.	பிலியைன் தீவுகள்	114,400	குடியாட்சி
65.	சிரியா	73,587	,,
66.	தாய்லாந்து	198,247	முடியாட்சி

அமெரிக்காவில்

எண்.	நாட்டின் பெயர்.	பரப்பு (சதுர மைல்)	அரசியல் அமைப்பு.
67.	பாகமஸ்	4,404	பிரி. காமன் வெல்த் அமைப்பு
68.	பாரபடஸ்	166	,,
69.	பெர்முடஸ்	19	,,
70.	பிரி. கயானா	89,480	,,
71.	பிரி. ஒண்டுராஸ்	8,598	,,
72.	பாக்லண்டு தீவுகள்	4,618	,,
73.	ஜமெய்க்கா	4,722	,,
74.	லீவேர்டு தீவுகள்	423	,,
75.	டிரினிடாட்	1,978	,,
76.	விண்ட் வேர்டு	821	,,
77.	கோஸ்டரீகா	19,238	குடியாட்சி
78.	கியுபா	44,217	,,
79.	டொமினிகன்	19,327	,,
80.	செயிண்ட் பியார்	93	பிரெ. யூனியன்
81.	பிரெ. கயானா	34,740	,,
82.	குவாடலூப்	686	,,
83.	மார்திநிகு	427	,,
84.	குவாடிமாலா	45,452	குடியாட்சி
85.	ஹைடி	10,748	,,
86.	ஒண்டுராஸ்	59,145	,,
87.	நெதர்லாந்து ஆண்டில்ஸ்	403	டச்சு யூனியன் கீழ்.
88.	சுரினம்	54,291	,,
89.	நிகாரகுவா	57,143	குடியாட்சி
90.	பனமா	28,575	,,
91.	பாராகுவே	154,165	,,
92.	எல் சால்வடார்.	13,176	,,
93.	உருகுவே	72,172	,,

ஆப்பிரிக்காவில்

எண்.	நாட்டின் பெயர்.	பரப்பு (சதுர மைல்)	அரசியல் அமைப்பு.
94.	பாசுடோ நாடு	11,716	காமன் வெல்த்
95.	காம்பியா	4,074	,,
96.	கானா	91,843	,,
97.	கென்யா.	224,960	,,
98.	மோரிசு தீவு	807	,,
99.	சிராலியோன்	27,925	,,
100.	சோமாலிலாண்டு	67,936	,,
101.	சுவாசி லாண்டு	6,705	,,
102.	உகண்டா	93,981	,,
103.	சான்சிபார்	1020	,,
104.	காபன்	103,089	பிரெஞ்சு யூனியன்
105.	மத்திய காங்கோ	132,046	,,
106.	உபாங்கி-சாரி	238,224	,,
107.	காமரூன்	170,230	,,
108.	மொராகா	153,870	,,
109.	துனிசியா	60,209	,,

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தனி நாடுகளாக இருக்கத் தகுதியற்றன என்பது ஒத்துக் கொள்ளப்பட்டால் தான் அவைகளை விடப் பெரியதாக இருக்கிற திராவிடத்தின் தனி யுரிமையை மறுக்க முடியும், பக்கத்தில் தரப்பட்டுள்ள நாடுகளின் வரிசையைப் பார்த்தால், அதில் உலகில் மிக முக்கியமான, வளமான, வலிமை பொருந்திய நாடுகளாகக் கருதப் படும் பல நாடுகள், திராவிடத்தை விட அளவில் பல மடங்கு சிறியதாக இருப்பதைக் காணலாம்.

உதாரணமாக ஐரோப்பா கண்டத்தைப் பார்த்தால் ருஷியா தவிர மற்ற எல்லா ஐரோப்பிய நாடுகளும் திராவிடத்தைவிடச் சிறியன. இங்லாந்து, போர்ச்சுகல், ஸ்பெயின், பிரான்சு, இத்தாலி, சுவிட்சர்லாந்து, ஹாலந்து நெதர்லாந்து, நார்வே, சுவிடன், பின்லந்து, போலந்து செக்கோசுலேவியா, யூகோசுலேவியா, ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா, கிரீஸ் ... ப்படி ஐரோப்பா கண்டத்துப் படத்தை வைத்துப் பார்த்தால், காணப்படும் ஒவ்வொரு நாடும்-ருஷியா நீங்கலாக-திராவிடத்தின் நிலப் பரப்புக்குக் குறைந்தவையாகும்.

நிலப் பரப்பில் குறைந்தஅளவில் இந்த நாடுகள் இருக்கின்றன என்ற காரணத்தால் அவைகளை சேர்த்து ஒன்றாக்கி விடவேண்டும், ஒரே மொழி ஒரே ஆட்சியின் கீழ்கொண்டு வரவேண்டு மென்று ஐரோப்பிய நாடுகளுக்கு யாரும் ஆலோசனை கூறுவதில்லை. ஐரோப்பியச் சிறு நாடுகளையெல்லாம் அடக்கி ஒரே ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வர நெப்போலியன் முயன்றான் ஸ்பெய்ன் நாட்டு மாட்ரிட் நகரிலிருந்து ருஷிய நாட்டு மாஸ்கோ நகர் வரை அவனது பெரும் படையணி வகுப்புகள் பவனி வந்தன. ஐரோப்பிய நாடுகளனைத்தையும் ஒரே குடைக் கீழ்கொண்டு வந்ததாகக் கூட அவன் இறுமாப்பு அடையும் நிலை கூட சில காலம் இருந்தன, சிறு நாடுகள் அடக்கப்பட்டது உண்மை ஆனால் படைவலிமையால் வீழ்ந்த காரணத்தால், சிறு நாடுகள் தமது தனி நாட்டு உரிமையை இழந்து விடவில்லை. நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பின் ஒன்றுபட்ட ஐரோப்பா, அட்டைகளால் அடுக்கப்பட்ட விளையாட்டு வீடு விழுவது போல சரிந்து வீழ்ந்து, தனி நாடுகள் தம் தனி உரிமையை நிலை நாட்டின.

நெப்போலியன் விட்ட இடத்தில் இட்லரும் தொடர்ந்தான் "அவனியெல்லாம்" ஆளப்பிறந்தது தாமே என்ற ஆணவப் போக்கில், ஐரோப்பிய நாடுகளைப் படைகளால் துவைத்துத் தள்ளினான். படைபலம் அவனது ஆதிபத்தியத்தைச் சிறிதுகாலம் காத்தது. அ

நாட்டின் பெயர்.	பரப்பு (சதுர மைல்)	அரசியல் அமைப்பு.
தகோமே	44,749	பிரெஞ்சு யூனியன்
பிரெ கயானா	108,455	,,
ஒடேவோல்தா	121,892	,,
ஐவரிகோஸ்ட்	129,807	,,
செனிகல்	81,081	,,
டோகோ	21,235	,,
பிரெ. சோமாரிலாந்து	8,376	,,
ரேயூனியன்	970	,,
லைபீரியா	40,000	குடியாட்சி

ஆஸ்திரேலியா - தூரக்கிழக்கு தீவுகள்

பிஜி திவுகள்	70,40	காமன் வெல்த்
கில்பர்ட் தீவு	312	,,
நியூ கெபிரிடஸ்	4,633	,,
நியூ சிலந்து	103, 416	,,
நியூ கயானா	183,540	,,
சாலமன் தீவுகள்	11,458	,,
மேற்கு சமோவா	1,133	,,
பிரெ. பசிபிக் தீவுகள்	1,545	பிரெ, யூனியன்
நியூ கலிடோனியா	7,654	,,
நியூ கெபிரிடஸ்	4,633	,,
நேபாளம்	54,000	முடியாட்சி

...து படைபலம் முறிந்ததும், ...டக்கப்பட்டிருந்த சிறு நாடு ...மீண்டும் தலைதூக்கி நிமிர்ந்...ன. நிலப்பரப்பில் குறுகிய ...ளவு என்பதற்காக எந்தச் ...று நாடும் தனது விடுதலை ...ரிமையை மறுத்துவிட ...ல்லை. முன்னைவிட அதிக ...ர்வத்துடன் விடுதலை வாழ்...வத திரும்ப வாங்கிக்கொண் ...ன!

விடுதலை உரிமை ஒரு நாட்...ன் பரப்பைக் கொண்டு நிர்ண...க்கப்படுவதல்ல! பெரிய ...டாக இருந்தால் நல்லது ...ன்றோ, சிறிய நாடாக இருந் ...தால் தீது என்றோ கூறமுடி...து. நாடு நல்லதாக இருக்க ...ந்தநாட்டு ஆட்சி நல்ல ஆட்...யாக இருக்கவேண்டும். அர...யல் துறையிலும் பொருளா...தாரத் துறையிலும் அடிமைப் ...பட்டிருக்கிற நாட்டில், நல்ல ...ாரு ஆட்சி இருப்பதாகக் ...றமுடியாது!

...நாட்டுப் பிரிவினை என்றால் ...ந்தியாவில் அதற்குப் பயங்... விளைவுகள் கற்பிக்கப்படு...ன்றன. பாகிஸ்தான் பிரி...வினைக்குப்பின் ஏற்பட்டுள்ள ...நாட்டின் நிலைமையை முன் ...வைத்து அவர்கள் அப்படிக் ...கூறுகின்றனர்: இந்தியாவில் ...ஏற்பட்ட நலிவுநிலைமை, பாகிஸ்...தான் பிரிந்ததால் ஏற்பட்டது ...எனக் கூறுவது, சீர் கேடான ...நிலைமைக்கு ஒரு காரணமாகக் ...காட்ட அது பயன்படுத்தப்படு...கிறது.

இந்தியாவில் பிரிவினை என்...பது இது முதல் தடவையல்ல. ...30க்கு முன் இந்தியா இன்...னும் பெரிய அளவில் இருந்...தது. அப்பொழுது இந்தியா...வுடன் பாகிச்தானம் மட்டு...மல்ல இலங்கை, பர்மா எல்...லாம் கூடியிருந்தன.

1931 இல் இலங்கை இந்தியாவினின்றும் பிரிக்கப்பட்டு தனிப் பகுதியாக்கப்பட்டது.

1937ல் பர்மா இந்தியாவினின்றும் பிரிக்கப்பட்டு தனிப் பகுதியாக்கப்பட்டது!

1947ல் பாகிச்தானம் இந்தியாவினின்றும் பிரிக்கப்பட்டு தனிப்பகுதியாக்கப்பட்டது!

இவ்வாறு இலங்கை பிரிக்கப்பட்ட போது பயங்கர விளைவுகள் ஏதும் நிகழவில்லை. இரண்டாவதாக பர்மா பிரிந்து போன பொழுதும் ஆபத்தான சூழ்நிலை ஏதும் உண்டாகவில்லை. கடைசியாக பாகிச்தானம் பிரிந்தபொழுது தான் ஆபத்துக்கள் சூழ்ந்ததாகக் கூறப்படுகிறது. "ஒரு பிரிவினைக்குப் பின் நாம் படுகிற அவதிபோதும், இதற்கு மேலும் நாட்டுப் பிரிவினை வேண்டாம்!" என்று கூறுபவர்கள், அதற்கு முன் இரண்டு பிரிவினைகள் நடைபெற்றிருக்கின்றன என்பதை மறந்துவிடக் கூடாது. மூன்று பிரிவினைகள் நடைபெற்றிருக்கும் பொழுது நான்காவது பிரிவினை நடைபெறுவதில் தவறு இல்லை!

காரணம், ஏற்பட்டுள்ள நலிவுகள் அனைத்தும் பிரிவினையால் ஏற்பட்டவையல்ல; அவை பெரும்பாலும் ஆட்சியின் கோளாறுகளால் ஏற்பட்டவை! இவர்கள் செய்கிற தவறுகளுக்கும் குறைகளுக்கும் பிரிவினையை ஒரு காரணமாகக் காட்டி விடுகிறார்கள், அவ்வளவுதான்!

இவர்கள் கூற்றுப்படி, பிரிவினையால் ஒரு நாட்டின் விடுதலை உரிமை பாதிக்கப்படும் என்பதுண்மையானால் இலங்கையும் பர்மாவும் இந்தியாவும் பாகிச்தானமும் எல்லாம் ஒன்று கூடி ஒரே அமைப்பாக இருந்தபொழுது நன்றாக இருந்திருக்க வேண்டும். ஆனால் நான்கு நாடுகளும் ஒன்றாக இருந்தபொழுது எந்தக் காரணத்தினாலோ, ஒரு ஏகாதிபத்தியத்தின் கீழ் அடிமையாக இருந்தது. ஒன்றாக இருந்தால் விடுதலை உரிமை நிலைக்கும் என்பதை அது தவறாக்குகிறது. அடிமை நிலையில் ஒவ்வொன்றாகப் பிரிந்தன, பிரிந்த நிலையில் விடுதலை பெற்றன. அடிமை நிலைக்கும், விடுதலை உரிமைக்கும் நிலப்பரப்பு என்றும் அடிப்படையாக இருந்ததில்லை என்பதற்கு இந்தியாவின் வரலாறே எடுத்துக் காட்டாக இருக்கிறது.

விடுதலை உரிமையை நாம் கேட்கும்பொழுது, ஒன்றாக இருக்கும் ஒரு நாட்டைத் துண்டாக்கச் சொல்லவில்லை; சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும் பல நாடுகளைப் பிரித்து விடும்படி வலியுறுத்துகிறோம்!

தனிப்பட்ட வரலாறும் பண்பாடும் மொழிவகையும் பொருளாதாரமும் உடைய ஒரு பகுதியை அடக்கி வைத்துக் கொண்டுப் பிரிவினை கூடாது என வாதிடுவது, தேசியப் பற்று அல்ல, ஏகாதிபத்திய உணர்ச்சியாகும்! அத்தகைய ஏகாதிபத்திய ஆணவத்துடன் தான், டில்லி தென்னாட்டைப் பார்த்துப் பிரிவினை கூடாது எனப் பேசுகிறது! ஏகாதிபத்தியம் முதலில் அப்படித்தான் பேசும், பேசும் நிலை கடந்தால் அடக்குமுறைகளையும் துப்பாக்கிக் குண்டுகளையும் வீசும்! இது ஏகாதிபத்திய வரலாற்றில் வழக்கமாக நடைபெறும் வரலாறு!

டில்லிமிரட்டுவதைவிட இன்னும் உரத்தகுரலில்தான், இலண்டன் மிரட்டிக்கொண்டிருந்தது இந்தியாவோ, பர்மாவோ இலங்கையோ மலேயாவோ என்றென்றும் தனக்கு அடிமையாக இருக்குமென்றுதான் இலண்டனில் இருந்த ஏகாதிபத்தியம் ஆணவத்துடன் ஆர்ப்பரித்தது; ஆனால் அதே இலண்டன் ஏகாதிபத்தியம் பின்பு இந்தியாவும், இலங்கையும், பர்மாவும் மலேயாவும் விடுதலை பெற்றபொழுது, "வருக! வருக!" என வரவேற்க வேண்டியிருந்தது. அதைப் போல, திராவிடத்தின் தலை உரிமைபற்றி டில்லி ஏகாதிபத்தியம் ஆணவத்துடன் பேசினாலும், ஒருகாலத்தில் "வருக திராவிடம்!" என டில்லி ஆட்சியே வரவேற்பு கூறவேண்டிய கட்டத்தில் நிறுத்தப்படலாம். அந்த நல்லநாள் எவ்வளவு விரைவில் வருகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நமக்கும் நல்லது அவர்களுக்கும் நல்லது, உலகுக்கும் நல்லது!

வாழ்க திராவிடம்!

<u>தலைமைக்கழக அறிக்கை</u>

கே. வி. கே. சாமி நினைவு நாள்!

★

திராவிட முன்னேற்றக்கழக முன்னணி வீரரும், செயற்குழு உறுப்பினரும், நெல்லை மாவட்டச் செயலாளரும், தொழிலாளர் தலைவருமாகிய தோழர் கே. வி, கே' சாமி அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து 20—9—57 அன்று ஓராண்டு நிறைவு பெறுகிறது. எனவே நாடெங்கிலுமுள்ள தி. மு, கழகக் கிளைகள் அவரது நினைவு நாளான **29—9—'57** ஞாயிறு அன்று கொண்டாடுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

'19-9-57'
'அறிவகம்'
சென்னை-13

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.

"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன், எம். ஏ.—(தொலை பேசி எண்: 56097